# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,873 — 1969 සැප්තැම්බර් 23 වැනි සිකුරාදා — 1969.9.26

14,873 ம் இலக்கம் — 1969 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 26 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 1035 | ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும் .. .. | 1057 |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 1051 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 1052 | அந்நிய குடியகல்வு உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | 1054 | ஏல விற்பனைகள் — .. .. | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. .. | 1055 | நானாவித அறிவித்தல்கள் .. .. | 1058 |


### பதவிகள் — வெற்றிடம்

" இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள் "

*1. படிகள்.*—வேறுவிதமாகச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்குவிதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

*2. சேவைக்குரிய நிபந்தனைகள்.*—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கரும முறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.

*3. நியமன விதிகள்.*—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் விதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத வீதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்தவேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சதவீதத்தையோ செலுத்தினாலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத வீதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.

(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.

(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அச் சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்துவீபத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடற்றகுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.

*4. அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்.*—(i) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு 'நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின்' தகுதிகாண்/சோதனைக் காலம் எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றாண்டாகும்.

(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இல. அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவார் என்னும் நிபந்தனைக்குட்படல்வேண்டும்.

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானிகளில் அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலை கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விடை சகாசருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1968 ம் ஆண்டு டிசெம்பர் மீ 14 ந் உ.

எஸ். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகன்.

(iii) (அ) நியமன கடமையைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.

(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில், பிறவற்றுடன் க. பொ. த. ப. கட்டத்திற்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிச் சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறுவதைப் பொறுத்து அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடையவேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள், அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.

குறிப்பு—சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்குப் பெறுவர்.

5. வேண்டிய தகைமைகள்.—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாகவிருப்பவராகும்.

6. யுத்தசேவைச் சலுகை.—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின், மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், தீயணைக்கும் படை, விமானத்தாக்கப் பாதுகாப்புப்படை, ஊர்ப்பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளைவிட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேர கடமையாற்றியவர்களும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிவரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம், தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் திகதிக்கு முன் சேர்ந்து இருந்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.

7. பிற தேவைகள்.—(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும் தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை, இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந்நூலின் 109 நிருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றோ எனவுங் கூறல் வேண்டும்.

(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்கவேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இதுவிடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.

(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப் பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.

(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டு பிடிக்கப்படின், அப் பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.

(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8. தகுதிக்கான சம்பளத்தின் வரையறை.—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியவை சம்பளத்துடன் அடங்காது.

---

இல. AA 87/ X. 2150/69

## கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழுத் திணைக்களம்

### மின் இஞ்சினியர் பதவி

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழுத் திணைக்களத்தில் மின் இஞ்சினியர் பதவிக்கென விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த அலுவலகத்தில் இருந்து கிடைக்கப்பெறும் அச்சிடப்பட்ட படிவங்களில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு "செயலாளர், அரசாங்கசேவை ஆணைக்குழு, த. பெ. இல. 500, கொழும்பு I" என்ற முகவரியில், பின்வரும் திகதிகளில் அல்லது அத்திகதிகளுக்கு முன்னர் வந்து சேரும்படியாக அவை அனுப்பப்படுதல் வேண்டும் :—

(அ) உள்நாட்டு விண்ணப்பங்கள் 9.10.1969

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் 17.10.1969

குறிப்பு.— (1) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அனுப்புமாறு அஞ்சல் மூலம் வேண்டுகோள் விடுப்பவர், தமது முகவரி இடப்பட்ட முத்திரை ஒட்டப்படாத, 9" × 4" அளவுக்குக் குறையாத கடித உறையையும் சேர்த்து அனுப்புவதோடு, அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையில் ஒரு உத்தியோகத்தரா, இல்லையா என்பதையும் தெளிவாகக் காட்டுதல் வேண்டும் ;

(2) விண்ணப்பப் படிவம், அல்லது அப்படிவம் தொடர்பான ஒரு கடிதம், அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதம் ஆகிவிட்டது என்ற குற்றச்சாட்டெதுவும் கவனிக்கப்பட மாட்டாது. கடைசி நாட்கள்வரை தங்கள் விண்ணப்பங்களைத் தாமதம் செய்யும் அபேட்சகர்கள், அத்தாமதத்திற்குத் தாமே பொறுப்பாக இருப்பார்கள் ;

(3) வெளிநாட்டு அபேட்சகர்கள் அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவங்களை பிறநாட்டிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். இலங்கை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு அனுப்பி வைப்பதற்கென விண்ணப்பப் படிவங்களை அவர்கள், விரும்பினால் தாங்கள் வசிக்கும் நாட்டுக்குரிய, அல்லது அந்நாட்டுக்கு மிகச் சமீபமாயுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு விதிக்கப்பட்ட கால எல்லைக்குள் அனுப்பலாம்.

(4) மருத்துவச் சோதனையும், பயணச் செலவும்

இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுதற்கு வெளிநாட்டில் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல் நலம் உடையவர்களாக இருக்கிறார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுபவரிடம் பரீட்சைக்கெனச் செல்லுதல் வேண்டும். அத்தகைய மருத்துவச் சோதனைக்குரிய கட்டணத்தையும், இலங்கைக்குப் பயணம் செய்வதற்கான செலவையும் அவ்வுத்தியோகத்தர்களே கொடுத்தல் வேண்டும்.

2. நியமன விதிகளும், சேவை நிபந்தனைகளும்.

(1) பதவி நிரந்தரமானது ; அத்துடன் இளைப்பாறு சம்பளமுடையது.

(2) தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர் குறுகியகால அறிவித்தலில் வேலையைப் பொறுப்பேற்க வேண்டும்.

3. **சம்பளமும், படிகளும் :**

இப்பதவிக்கான சம்பள அளவுத் திட்டம் வருமாறு :— வருடமொன்றுக்கு ரூபா 5,160—360 × 3—6,240/6,960—360 × 4, 480 × 10—13,200. வருடாந்தச் சம்பளமாகிய ரூபா 11,280 இல் இருவருடங்கள் நிறுத்தி வைக்கப்படும். அத்துடன், வருடாந்தச் சம்பளமாகிய ரூபா 6,960, ரூபா 11,280 முனைப்பு திறமைகாண் தடைகள் உண்டு.

**குறிப்பு** :—(1) மேலேயுள்ள சம்பள அளவுத் திட்டத்தில் வருடாந்தச் சம்பளமாகிய ரூபா 10,800 க்கு மேலான சம்பளத்தைப் பெறும் உரிமையைப் பெறுவதற்கென முழுமையான உயர்தொழிற் தகைமைகளைப் பெற்றிருக்க வேண்டும்.

(2) முழுமையான உயர் தொழிற் தகைமைகளைப் பெறும்பொழுது விண்ணப்பதாரர் வருடாந்த சம்பளமாக ரூபா 7,320 அல்லது அதற்கு மேலாகப் பெற்றிருந்தால் மேலேயுள்ள சம்பள அளவுத் திட்டத்தில வருடமொன்றுக்கு ரூபா 7,320 சம்பளத்தைத் தரும் திகதியிலிருந்து பெறுவதற்கு அவருக்கு உரிமையுண்டு.

4. **தேவைப்படும் தகைமைகள் :**

ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளையுடையவர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்டுதல் வேண்டும் :—

(அ) சிறந்த பண்பும், உடல் நலமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) 9.10.1969 ஆந் திகதியன்று வயது 35 வருடங்களுக்கு மேல் இருத்தல் ஆகாது.

(இ) (1) இலங்கைப் பல்கலைக் கழகத்தின் எந்திரவியல் பட்டப்பரீட்சையில் அல்லது அதற்கு நிகரான அங்கீகரிக்கப்பட்ட பட்டப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது

(2) மின் இஞ்சினியர் நிலையம் (லண்டன்) நடாத்தும் பரீட்சையின் 1 ஆம், 2 ஆம், 3 ஆம் பகுதிகளில் அல்லது அவற்றிற்கு நிகரான பரீட்சைகளில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு.**— இலங்கை பல்கலைக் கழகத்தின் எந்திரவியல் பட்ட (மின்) இறுதிப் பரீட்சைக்குத் தோன்றி அப்பரீட்சைகளின் பெறுபேறுகளைக் காத்திருக்கும் இலங்கைப் பல்கலைக் கழகமாணவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். இப்படியான விண்ணப்பதாரர்கள், பரீட்சைப் பெறுபேறுகள் பிரசுரமாகி ஒரு வாரத்திற்குள், தாங்கள் பரீட்சையில் சித்தியடைந்ததைத் அல்லது சித்தி அடையாததைப் பற்றி எழுத்துமூலம் எனக்கு அறிவித்தல் வேண்டும். பரீட்சையில் தாங்கள் சித்தியடைந்ததாக உரிய காலத்தில் எனக்கு அறிவிக்கும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் நியமனத்துக்கென கவனிக்கப்படும்.

5. அபேட்சகர்கள் வேண்டப்படும் பொழுது பின்வரும் சாதனங்களில் ஏதேனும் ஒன்றை அல்லது எல்லாவற்றையும் சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (முக்கிய குறிப்பு.—ஞானஸ்நானச் சான்றிதழ்கள், அல்லது உதவிபெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குவிதிக் கோவையின் நோக்கத்திற்கென வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா).

(ஆ) பட்டப் பரீட்சையில் சித்தியடைந்ததற்கான சான்றிதழ், அல்லது மிக உயர்ந்த கலவித் தராதரப் பத்திரம் ;

(இ) பண்பு பற்றிய இரு சான்றிதழ்கள். இவற்றில் ஒன்று பாடப் பண்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருத்தல் வேண்டும் ;

(ஈ) உயர்தொழில் தகைமைச் சான்றிதழ், அல்லது தொழில் நுட்பத் தகைமைச் சான்றிதழ், அல்லது இவ்விரு சான்றிதழ்களும் ;

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைக்கான சான்றிதழ்.

**குறிப்பு**—(1) இவ் விண்ணப்பப் படிவத்துடன் சாதனங்கள், அல்லது சாதனங்களின் பிரதிகள் இணைக்கப்படக் கூடாது ;

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படும்பொழுது அவ்விதஞ் செய்யாமல் இருக்கும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலிருக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும். எனினும் தங்கள் விண்ணப்பங்கள் தங்களினால் அனுப்பப்பட்ட திகதியை அவர்கள் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு முடிவுத் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும்படி நேராக அனுப்புதல் வேண்டும். இத் தேவைக்கென, விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்பட்ட (" ஆ " எனக் குறியிடப்பட்ட) அச்சிட்ட அஞ்சல் அட்டையை உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களும் அவை சம்பந்தமான வேறேதும் கடிதத் தொடர்புகளும் அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளரின் முகவரிக்கே அனுப்பப்படுதல் வேண்டும். அவைகளை இத்திணைக்கள உத்தியோகத்தர் எவருக்காவது அவரின் சொந்தப் பெயருக்கு அனுப்புதல் கூடாது.

8. இந்த வர்த்தமானப் பத்திரிகையின் I ஆம் பகுதி, II ஆம் தொகுதி ஆரம்பத்தில் வெளியிடப்பட்டிருக்கும் அரசாங்க சேவைப் பதவி நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகளைப் பார்வையிடுக.

9. விண்ணப்பப் படிவத்துடன் அபேட்சகர்களுக்கு வழங்கப்பட்ட (" அ " எனக் குறியிடப்பட்ட) அச்சிட்ட அஞ்சல் அட்டையை அதில் கூறப்பட்டிருப்பதுபோல அவர்களே நிரப்பித் திருப்பி அனுப்புதல் வேண்டும். அவ்விதம் அவர்கள் செய்தால், இந்த அலுவலகத்தில் அவர்களின் விண்ணப்பப் படிவங்கள் கிடைத்தது பற்றி அவர்கள் அறிவிக்கப்படுவார்கள். இத் தேவையின் பிரகாரம் நடந்து கொள்ளத் தவறிய அபேட்சகர்களுக்கு, அவர்களின் விண்ணப்பங்கள் கிடைத்தது பற்றிய அறிவித்தல் கொடுக்கப்படமாட்டாது. இத்தேவையின் பிரகாரம் நடந்து கொண்டவர்களுக்கு முடிவுத் திகதியிலிருந்து மூன்று கிழமைகளுக்குள் அவர்களின் விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டதற்கான அறிவித்தல் கிடையாமலிருந்தால் அவர்கள் அதுபற்றி அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி நடக்கத் தவறும் விண்ணப்பதாரர், தன் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கோரும் எந்த உரிமையையும் இழந்தவராவர்.

டீ. ஆர். எல். பாலசூரிய,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,
த. பெ. இல. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1, 19.9.1969.

9—1006/1—26.9.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,783

---

No. AB. 88/X2151/69

## பூகற்ப ஆராய்ச்சித் திணைக்களம்

### புவிப்பௌதிகவியலாளர் அல்லது பயிற்சி பெறும் புவிப்பௌதிகவியலாளர் பதவி

பூகற்ப ஆராய்ச்சித் திணைக்களத்திலுள்ள புவிப் பௌதிகவியலாளர் அல்லது பயிற்சி பெறும் புவிப் பௌதிகவியலாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் இக்கந்தோரால் வழங்கப்படும், அச்சிடப்பட்ட படிவங்களில் எழுதப்பெற்று, " செயலாளர் அரசாங்க சேவை அதிகார சபை, த. பெ. இல. 500, கொழும்பு 1 " என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்க கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

(அ) உள்நாட்டு விண்ணப்பங்கள் : 1969.10.9.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் : 1969.10.17.

குறிப்பு.—(i) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9" × 4" அளவுக்குக் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையைத் தமது கடிதத்துடன் அனுப்புதல் வேண்டும். மேலும் அபேட்சகராக இருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவா என்பதை விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப்படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதிவரை பொறுத்திருப்பவர்கள் அதனால் ஆகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிற நாட்டிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகள் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். அவ் அபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை விதிக்கப்பட்ட கால எல்லைக்குள் அவர்கள் வசிக்கும் நாட்டிற்குரிய அல்லது அந்நாட்டிற்கு மிகக் கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு அனுப்பலாம்.

**(iv) மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.**—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டில் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள் சேவைக்குத் தகுதியான உடல் நலமுடையவர்களாக இருக்கிறார்களா என்பதை உறுதிப் படுத்துவதற்கான மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு வேண்டப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

**புவிப் பௌதிகவியலாளர் :**

**2. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளத்திற்குட்பட்டதுமாகும். இந்நியமனம் முதல் 3 வருட காலமும் தகுதி காண் நிலையில் நியமிக்கப்படும்.

**3. சம்பளமும் படிகளும்.**—இப் பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறு :—

வருடம் ரூபா 4,080 ல் ஆரம்பமாகி வருடம் ரூபா 360 ஐக் கொண்ட 12 வருட உயர்வுகளாலும், வருடம் ரூபா 480 ஐக் கொண்ட 10 வருட உயர்வுகளாலும் ரூபா 13,200 வரை உயர்வதுடன் ரூபா 11,280 ல் இரு வருடங்களுக்கு நிற்கும். வருடாந்தச் சம்பளம் ரூபா 8,400 க்கு முன்னும் ரூபா 11,760 க்கு முன்னும் வினைத்திறமைகாண் தடைகள் உண்டு. தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் அங்கீகரிக்கப்பட்ட புவிப்பௌதிகவியல் துறையில் பட்டமேற்படிப்புப் பட்டமோ அல்லது அதற்குச் சமமான பட்டமோ பெறவேண்டும். அல்லது அங்கீகரிக் கப்பட்ட விஞ்ஞான வெளியீடு ஒன்றில் தனது சொந்த வேலை சம்பந்தமான விஞ்ஞான ஈடுபாடுபற்றி பிரசுரிக்கப்பட வேண்டும். தவறின் சம்பள அளவில் 8,400 க்கு மேலாகச் செல்ல அனுமதிக்கப்படார். அப்படி பிரசுரிக்கப்பட்ட வேலையை ரூபா 8,400 ல் உள்ள வினைத்திறமைகாண் தடையின் உயர்வுக்காக அரசாங்க சேவை அதிகார சபையால் நியமிக்கப்படும் குழுவால் மதிப்பிடப்படும் தேர்வு நடைபெறும் நேரத்தில், அபேட்சகர் பட்டமேற்படிப்புப் பட்டதாரியாகவோ அல்லது அதற்குச் சமமாகவோ இருந்தால் அல்லது ஓர் அங்கீகரிக்கப்பட்ட விஞ்ஞான வெளியீட்டில் தனது வேலை பிரசுரித்திருந்தால் அரசாங்க சேவை அதிகார சபையால் நியமிக்கப்பட்ட ஒரு முழுவினால், பிரசுரிக்கப்பட்ட வேலையை மதிப்பீடு செய்து ரூபா 5,160 யை ஆரம்பப் படியாக வழங்கப்படும்.

**4. தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளை உடையவர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்டுதல் வேண்டும்.

(அ) அபேட்சகர் சிறந்த நற்குணமுடையவராயும் உடல்நலமுடையவராயும் இருத்தல் வேண்டும்.

(ஆ) வம்சாவழியாகவோ அல்லது பதிவினாலோ இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(இ) 1969.10.9 ல் 22 வயதுக்கு உட்படாமலும் 30 க்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ளவர்களிடமிருந்து பெறும் விண்ணப்பங்கள் கூடிய வயதுக் கட்டுப்பாடு வேற்றுமையின்றி கவனிக்கப்படும்).

(ஈ) ஓர் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானப் பட்டதாரிப் (விசேஷ) பட்டத்துடன் புவிப்பௌதிகவியலில் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பில் சிறப்புப் பட்டம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.

**பயிற்சி பெறும் புவிப் பௌதிகவியலாளர் :**

**5.** தகைமைகளும், நியமன நியதிகளும், படிகளும், சேவை நிபந்தனைகளும் :—

(i) 4 ம் பந்தியில் குறிப்பிட்ட தகைமைகள் உள்ள அபேட்சகர்கள் புவிப் பௌதிகவியலாளர்களாக நியமிக்கத் தோற்றுவிடின் கீழ் காணும் தகைமைகளையுடைய அபேட்சகர்களைப் பயிற்சி பெறும் புவிப் பௌதிகவியலாளர்களாகத் தெரிவு செய்ய ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். அப்படித் தெரிவு செய்யப்பட்டோர் புவிப் பௌதிகவிலாளர் பதவிக்கு நியமிக்கப்படமுன் புவிப் பௌதிகவியலில் விஞ்ஞானப் பட்டதாரிப் (விசேஷ) பட்டத்துடன் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்புச் சிறப்புப் பட்டம் பெற வேண்டும்.

(அ) ஓர் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தில் பௌதிகவியல் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்புச் சிறப்புப் பட்டத்துடன் விஞ்ஞானப் பட்டதாரி (விசேஷ) பட்டம்.

(ஆ) பயிற்சி பெறும் புவிப் பௌதிகவியலாளராக நியமிப்பதற்கு பூகற்ப ஆராய்ச்சிக் கந்தோரில் குறைந்தது 5 வருடங்கள் கடமையாற்றிய பின்வரும் கல்வித் தாரதரங்களையுடைய உத்தியோகத்தரும் ஆலோசனைக்கு தகுதி உடையவராவர்.

(1) கணிதத்துடனும் பௌதிகத்துடனும் விஞ்ஞானப் பட்டதாரி (பொது) ப் பட்டம்.

(இ) 1969.10.9 ல் வயது 19 க்கு உட்படாமலும் 26 க்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ளவர்களிடமிருந்து பெறும் விண்ணப்பங்கள் கூடிய வயதுக்கட்டுப்பாடு வேற்றுமையின்றி கவனிக்கப்படும்.

(ii) விஞ்ஞானப் பட்டதாரி (விசேஷ) ப் பட்டத்துடன் நேரடியாகத் தெரிவு செய்யப்பட்டோர் பயிற்சியில் இருக்கும் காலத்தில் வருடம் ஒன்றுக்கு ரூபா 3,780 ம் அதற்குரிய வாழ்க்கைச் செலவுப் படியும் விசேட வாழ்க்கைப் படியும் வாடகைப் படியும் வழங்கப்படும். பூகற்ப ஆராயச்சிக் கந்தோரிலிருந்து பயிற்சி பெறும் புவிப் பௌதிகவியலாளராகத் தெரிவு செயயப்பட்டோர் பயிற்சிக் காலங்களில் தங்களது முந்திய பதவியின் சம்பள அளவுத் திட்டத்திலேயே தொடர்ந்தும் சம்பளம் பெறுவர். பயிற்சியை வெற்றிகரமாக முடித்ததும், அதாவது புவிப் பௌதிகவியல் விஞ்ஞான பட்டதாரி (விசேஷ)ப் பட்டம் பெற்று புவிப் பௌதிகவியலாளராக நியமிக்கப்பட்டதும் அவர்கள் 3 ம் பந்தியில் குறிபபிட்ட சம்பள அளவுத் திட்டத்திற்கு உரிமையுடையோராவர்.

(iii) பயிற்சி பெறும் புவிப்பௌதிகவியலாளர் பூகற்ப ஆராய்ச்சித் திணைக்களத்தில் பயிற்சி நெறி ஒன்றில் ஈடுபடுத்தப்படுவர். அவருடைய வேலையும் நடத்தையும் திருப்திகரமாகக் காணபபட்டால் புவிப் பௌதிகவியலில் பயிற்சி பெறுவதற்காக, இலங்கையில் அல்லது வெளிநாட்டில் உள்ள ஒரு பல்கலைக் கழகத்திற்கு அனுப்பப்படுவார். திணைக்களத்தில் பயிற்சி பெறும் காலத்தில் ஒரு பயிற்சியாளரது வேலையும் நடத்தையும் திருப்திகரமற்றதெனக் காணப்பட்டால் அல்லது அவருக்கென ஒழுங்கு செய்யப்பட்ட பயிற்சி நெறியில் பயில மறுத்தால் அவர் முன்னறிவித்தல் எதுவும் இன்றி நீக்கப்படுவர். அத்துடன் திணைக்களத்தில் அவரது பயிற்சிக்கென செலவிடப்பட்ட முழுத் தொகையையும் அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுவார்.

(iv) தெரிவு செய்யப்பட்டவர் நியமனத்திற்கு முன்போ அல்லது பின்போ பயிற்சி நெறியைப் பெறுவதற்காக வெளிநாட்டுக்கு அனுப்ப நேரிடலாம். பயிற்சி நெறிக் காலத்தில் அந்நேர ஏற்பாட்டிற்கிணங்க படிகள் வழங்கப்படும். தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் பிற நாட்டில் பயிற்சி நெறி ஒன்றைப் பின் பற்ற நேரிட்டால் அவர் அரசாங்கத்துடன் ஓர் உடன்படிக்கை செய்யக் கேட்கப்படுவார் (ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாதோர் இரு பிணை நிற்போருடன் உடன்படிக்கை செய்ய கேட்கப்படுவார்.) அத்துடன் பின் வருவனவற்றையும் மேற் கொள்ளப் படுபவராவர் :—

(அ) அவர் ஊக்கமாகவும் விசுவாசமாகவும் தனக்கு ஒழுங்கு செய்யப்பட்ட பயிற்சி நெறியை பின்பற்றி அதனைத் திருப்திகரமாக முடித்தும் பயிற்சி முடிவில் அவசியமேற்பட்டால் ஒரு குறிப்பிட்ட காலம்வரை (அரசாங்கத்தால் தீர்மானிக்கப்படும்) அரசாங்கத்துக்கு சேவை செய்வதாயும் ;

(ஆ) இந்த உடன்படிக்கை அல்லது பிணை ஆகியவற்றின் நிபந்தனைகளுக்கு ஏற்ப நடக்கத் தவறினால் இலங்கை அரசாங்கத்தால் அல்லது புலமைப் பரிசில் அளிக்க முன்வந்த ஸ்தாபனத்தால் பொறுக்கப்பட்ட முழுச் செலவுகளையும் அதாவது சம்பளம், படிகள், பயணச் செலவுகள், பயிற்சியோடு சம்பந்தப்பட்ட வேறு செலவுகளையும் அரசாங்கத்திற்கு மீளளிப்பதாயும் உடன்படிக்கை செய்ய வேண்டியவராவர்.

**6.** அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றையும் காட்டுமாறு கேட்கும் பொழுது சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (**முக்கிய :** சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்பட மாட்டாது),

(ஆ) பல்கலைக் கழகப்பட்டம் அல்லது மிக உயர்ந்த சான்றிதழ்,

(இ) குணச் சான்றிதழ் இரண்டு. இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும்.

(ஈ) தொழிற்றகைமையும் தொழினுட்பத் தகைமையும்/தொழிற் தகைமை அல்லது தொழினுட்பத் தகைமைபற்றிய சானறிதழ்

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றிற் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ் .

**குறிப்பு.**—(1) சாதனங்களையாயினும், சாதனங்களின் படிவங்களையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக் கூடாது.

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்பட மாட்டாது.

**7.** அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் திணைக்களத் தலைவர்களூடாக அனுப்புதல் வேண்டும். எனினும், அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல் விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக் கூடியதாக அனுப்புதல் வேண்டும். விண்ணப்ப படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" ஆ " எனக் குறியிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

8. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் "செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை" என முகவரியிட்டு அனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காகினும் நேராக அனுப்பக்கூடாது.

9. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காகிய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ம் பாகம், II ம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றைப் பார்க்க.

10. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("அ" எனக் குறியிடப்பட்டுள்ளது) அதன் கண் அறிவுறுத்தப் பட்டுள்ளவாறு விண்ணப்பக்காரர் நிரப்பி அனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டீ. ஆர். எல். பாலசூரிய,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகாரசபை.

அரசாங்க சேவை அதிகாரசபை அலுவலகம்,
த. பெ. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
1969 ம் ஆண்டு செப்ரெம்பர் மீ 19 ந் ௳.

9–1006/2—20.9.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,873

---

No. AB/91/X 2152/69.

## கணக்குப் பரிசோதனைத் திணைக்களம்

### சிரேஷ்ட பிரதிக் கணக்குப் பரிசோதகர் தலைமையதிபர் பதவி

கணக்குப் பரிசோதனைத் திணைக்களத்தில் சிரேஷ்ட பிரதிக் கணக்குப் பரிசோதகர் தலைமையதிபர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று, செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழு, அ. பெ. இல. 500, கொழும்பு 1.

(அ) உள்நாட்டு விண்ணப்பங்கள் : 9.10.1969.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் : 17.10.1969.

**குறிப்புகள்.**—(i) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9" × 4" அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையை தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும்; மேலும், அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப்படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக்கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக் கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு, அனுப்பலாம்.

**(iv) மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.**—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல்நலம் உடையவர்களாகவிருக்கின்றார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு வேண்டப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவைநிபந்தனைகளும்.**—இப்பதவி நிரந்தரமானதும், இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதுமாகும். விதவைகள், அனாதைகள், இளைப்பாற்றுச்சம்பள நிதிக்கு கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும்.

3. **சம்பளமும் படிகளும்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டம் வருமாறு :—வருடத்திற்கு ரூபா 16,800—2 × 600—ரூபா 18,000.

4. **தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமையுடையவர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்டுதல் வேண்டும் :—

(அ) அபேட்சகர் சிறந்த நற்குணமுடையவராயும், உடல் நலமுடையவராயும் இருத்தல் வேண்டும் ;

(ஆ) (i) இலங்கைத் தத்துவம் பெற்ற கணக்காளர் நிலையத்தில் ஓர் உறுப்பினராக இருத்தல் வேண்டும் ;

(ii) கணக்கியலில் உயர் தொழிற்றகைமை பெற்றபின் கணக்கியல்/நிதி முகாமை அல்லது/கணக்குப் பரிசோதனையில் பத்து வருட அனுபவம் வாயந்தவராக இருக்க வேண்டும் ;

(இ) 1969 ஒக்ரோபர் 9 ஆந் திகதியில் 45 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும். (ஏற்கெனவே அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு மேல் வயதெல்லை கணிக்கப்படமாட்டாது).

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையாயினும் அல்லது எல்லாவற்றினையும் காட்டுமாறு கேட்கும் பொழுது சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச்சான்றிதழ் (**முக்கிய குறிப்பு.**—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கு பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்பட மாட்டாது) ;

(ஆ) பல்கலைக்கழக பட்ட அல்லது மிக உயர்ந்த கல்விச்சான்றிதழ் ;

(இ) குணச் சான்றிதழ் இரண்டு, இவற்றில் ஒன்று பாடப்பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும் ;

(ஈ) உயர் தொழிற்றகைமையும் தொழில் நுட்பத்தகைமையும் உயர் தொழிற்றகைமை அல்லது தொழில் நுட்பத்தகைமை பற்றிய சான்றிதழ் ;

(உ) சிங்களம், தமிழ் ஆங்கிலம் ஆகியவற்றிற் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

**குறிப்பு.**—(i) சாதனங்களையாயினும், சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது ;

(ii) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும், அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அட்டையை ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழு என முகவரியிட்டு அனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்கும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்கும் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியில் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்ச லட்டையை (" அ " எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அதன்கண் அறிவுறுத் தப்பட்டுள்ளவாறு விண்ணப்பக்காரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக் கமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறு விடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத்தவறும் விண்ணப் பக்காரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டி. ஆர். எல். பாலசூரிய,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,
த. பெ. 500,
காலி முகச் செயலகம்,
கொழும்பு 1,
1969 ம் ஆண்டு செப்தெம்பர் மீ 9 ந உ.

9–1006/3—26.9.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,873

---

## இலங்கை இராணுவத்தில் பயிலுநர் படைப்பயிற்சி

இலங்கை இராணுவத்தில் பயிலுநர் படைப்பயிற்சிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பகாரர்கள் இலங்கை யில் பயிற்றப்படுவர்.

2. வெற்றிகரமாக இலங்கையில் பயிற்சிக் காலத்தைப் பூர்த்திசெய்யும் படைப்பயிற்சி பயிலுநர்கள் அரசாணை அமர்வு செய்யப்பட்டு இலங்கை இராணுவத்தின் நிரந்தரப் படையில் உத்தியோகத்தர்களாக இரண்டா வது லெப்டினண்ட் பதவியில் அமர்த்தப்பட்டு அவரவர்களின் தகுதிக் கேற்ப போர்ப்படையில் அல்லது பொதுசேவைப்படையில் அமர்த்தப்படு வர்.

3. **தகைமைகள் :** விண்ணப்பகாரர்கள்—

(அ) இலங்கைப் பிரசைகளாகவும்,

(ஆ) 1969 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 15 ந் திகதியன்று 18 வயதுக்கு குறையாதவர்களாகவும் 22 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

(இ) இலங்கைக் கல்விப் பொதுத்தராதரப் பத்திரப் பரீட்சையில் (சாதாரணம்) ஆறு பாடங்களில் குறைந்தபட்சம் நாலு பாடங் களில் திறமையான சித்தியுடன் இருதடவைகளுக்கு மேற்படா மல் சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலத்துடன் கணிதம் அல்லது தூய கணிதம் ஆகிய பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

குறிப்பு.—பொதுத் தகைமைக்கேற்ப பௌதிகத்திலும் தூய கணிதத்திலும் திறமையான சித்தியுடையோருக்கு முன்னு ரிமை வழங்கப்படும்.

(எ) விவாகமாகாதவர்களாயிருத்தல் வேண்டும். பயிற்சிக்காலத்தில் விவாகமாவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

(உ) தேவைப்படும் வைத்தியப் பரிசோதனைக்கு அமைவாகவிருக்க வேண்டும். இறுதி நேர்முகப் பரீட்சைக்கு தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பகாரர்கள் இலங்கை இராணுவத்தினால் ஒழுங்கு செய் யப்பட்ட வைத்தியப் பரிசோதனைக்குட்பட வேண்டும்.

4. **சேவை நிபந்தனைகள் :**

(அ) பயிலுநர் படைப்பயிற்சியாளர்களாய்ச் சேர்த்துக் கொள்ளப்பட்ட விண்ணப்பகாரர்கள் ஐந்து வருடங்கள் நிரந்தரப்படையிலும் ஏழு வருடங்கள் மேற்படையிலும் சேவைசெய்ய அனுமதிக்கப் படுவர்.

(ஆ) பயிற்சியிலிருக்கும் பயிலுநர் படைப்பயிற்சியாளரின் வருடாந் தச் சம்பள விகிதம் 1961 ம் ஆண்டின் இராணுவ வேதனச்சட்டக் கோவையின் ஒழுங்குவிதி 16 ன் நியதிகளுக்கு இணங்க ரூபா 2,700 ஆகும். பயிலுநர் பயிற்சியாளராகவிருக்கும் காலத் தில் அவர் எந்தச் சம்பளவேற்றத்துக்கும் உரிமையுடையரகார்.

(இ) படைத்தளபதியினால் விதிக்கப்படும் பயிற்சியை இலங்கையில் மேற்கொள்ளும்படி பயிலுநர் வேண்டப்படுவர். பயிற்சிக் காலம் ஏறத்தாள பதினெட்டு மாதங்களாகும்.

(ஈ) இக்காலத்தில் பயிலுநர் நிலை மற்றைய வரிசைப்பதவியினரைப் போன்றதாயும் இராணுவச் சட்டத்திற்குட்பட்டதாயும் இருக்கும்.

(உ) (i) பயிற்சியிலிருக்கும்போது, பயிலுநர் தாமாகவே அபேட்சகர் நிலையை விட்டுப்பிரிவின் அக்காலம்வரை அவர்மீது செலவழிக் கப்பட்ட எல்லாச் செலவுகளையும் பெற்றோர் அல்லது பாதுகா வலர் இலங்கை அரசாங்கத்திற்கு கொடுத்தல் வேண்டும்.

(ii) தமது பயிற்சியின்போது கெட்ட நடத்தை காரணமாக அல்லது தமது கட்டுப்பாட்டிற்குட்பட்ட பிற காரணங்களின் நிமித்தம் அரசாணை அமர்வுபெற தகைமையற்றவர் என்று அதிகாரி களினால் அறிக்கை செய்யப்படின் இலங்கை அரசாங்கத்தினால் அவரது பேரில் செலவிடப்பட்ட எல்லாச் செலவுகளையும் பெற்றோர் அல்லது பாதுகாவலர் இலங்கை அரசாங்கத்திற்கு கொடுத்தல் வேண்டும்.

(ஊ) அரசாணை அமர்வுக்கு நியமிக்கப்பட்டதும் பயிலுநராகச் சேர்ந்த பொழுது தரைப்படையின் நிரந்தரப்படையில் செய்துவந்த கடமைகளிலிருந்து விடுவிக்கப்படுவர்.

(எ) உத்தியோகத்தர்களாய் அரசாணை அமர்வு பெற்றதும் அவர்கள் இராணுவத்தில் குறைந்தபட்சம் ஏழு வருடங்கள் சேவை செய்யு மாறு எதிர்பார்க்கப்படுவர்.

(ஏ) சம்பளம், வாய்ப்புகள், சேவை நிபந்தனைகள் தொடர்பான கீழ்க்காணும் ஒழுங்குவிதிகள் இவ்வுத்தியோகத்தர்களுக்குப் பொருந்தும் :

(1) 1961 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ந் திகதியிடப்பட்ட 12,395 இலக்கத்தையுடைய இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு, காலத்திற்குக் திருத்தப்பட்டவாறான 1961 ம் ஆண்டின் இராணுவ வேதனச்சட்டக் கோவை.

(2) 1949 ம் ஆண்டு ஒக்டோபர் 10 ந் திகதியிடப்பட்ட 10,028 இலக்கத்தையுடைய இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான 1949 ம் ஆண்டின் உத்தியோகத்தர்களுக்கான ஒழுங்குவிதி.

(3) 1961 ம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 28 ந் திகதியிடப்பட்ட 12,680 இலக்கத்தையுடைய இலங்கை வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறான 1961 ம் ஆண்டின் தரைப்படை உபகாரச்சம்பள பணிக் கொடைச் சட்டக்கோவை.

(ஐ) சேர்க்கப்பட்டதும் பயிலுநர்கள் தமது அடிப்படைச் சம்பளத்தில் 4% வீதத்தை தமது உதவு தொகையாக படைக்கலந்தாங்கு சேவைகளின் விதவை அனாதை உபகாரச்சம்பள நிதிக்கு வழங்கு வதற்கு எழுத்துமூலமாகத் தமது சம்மதத்தைக் கொடுத்தல் வேண்டும்.

5. கீழே 6 ம் பந்தியில் காட்டியதற்கிணங்கப் பெற்றோர் அல்லது பாதுகாவலர் உறுதியுரைப் படிவத்தில் கையொப்பமிட்டு அவற்றை விண் ணப்பத்துடன் அனுப்பவேண்டும். தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் களின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் உறுதியுரைப்படிவத்தில் காட்டிய வண்ணம் இலங்கை அரசாங்கத்துடன் இந்த அபேட்சகர்கள் நியமனம் பெறுமுன் ஒரு ஒப்பந்தமுறியைச் செய்தல் வேண்டும்.

6. விண்ணப்பகாரரின் பெற்றோர் அல்லது பாதுகாவலரினால் கையெ ழுத்திடப்பட வேண்டிய உறுதியுரை :

(அ)................................................................ ஆகிய இலங்கை இராணுவத்தில் பயிலுநர் படைப்பயிற்சி விண்ணப்பகாரரின் பெற்றோர்/பாதுகாவலர் நானேயாவேன்.

(ஆ) மேலே கூறப்பட்ட விண்ணப்பகாரர் இலங்கையில் பயிற்சி நெறிக் காக தெரிவு செய்யப்படும் பட்சத்தில் பின்வரும் நிபந்தனைகளுக்கும் இத்தால் பொறுப்பேற்கிறேன் :—

(i) பயிற்சிக்காலத்தில் விண்ணப்பகாரருக்கு ஏற்படும் எல்லா தனிப்பட்ட செலவுகளும்,

(ii) பயிற்சியிலிருக்கும்போது மேலே கூறிய விண்ணப்பகாரர் தாமாகவே விலகினால் இலங்கை அரசாங்கத்தினால் விண்ணப் பகாரரின் கணக்கில் செலவிடப்படும் எல்லாச் செலவுகளையும் இலங்கை அரசாங்கத்திற்குத் திருப்பிக்கொடுப்பதற்கும்,

(iii) தமது பயிற்சியின் போது (கெட்ட நடத்தை காரணமாக அல்லது தமது கட்டுப்பாட்டிற்குட்பட்ட பிறகாரணங்களின் நிமித்தம்) அரசாணை அமர்வுக்குத் தகைமை அற்றவர் என்று அதிகாரிகளினால் அறிக்கை செய்யப்படின் மேலே

குறிப்பிட்ட விண்ணப்பகாரரின்பேரில் இலங்கை அரசாங்கத்தினால் *அவராதுபேரில் செலவிடப்பட்ட எல்லாச் செலவுகளேயும் இலங்கை அரசாங்கத்திற்குத் திருப்பிக் கொடுப்பதற்கும்.

*பொருந்தாதவற்றைக் கீறிவிடுக.

(கையொப்பம்)

திகதி : ———.

பெயரும் விலாசமும்—(தடித்த எழுத்தில்) : ———.

(சாட்சியின் கையொப்பம்)

பெயரும் விலாசமும்—(தடித்த எழுத்தில்) : ———.

திகதி : ———.

7. **மொழி தொடர்பான விதிகள்.**—தெரிவு செய்யப்படும் விண்ணப்பகாரர்கள் 1956 ம் ஆண்டின் 33 ம் இலக்க அரசாங்க மொழிக்கொள்கையைச் செயற்படுத்துவதற்கென விசேடமாக அரசாங்க மொழி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஏற்கனவே செய்யப்பட்ட விதிகளுக்குக்கும் அல்லது இனிமேல் செய்யப்படும் விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

8. ஏற்கனவே அரசாங்க சேவையிலிருக்கும் விண்ணப்பகாரர்கள் தமது விண்ணப்பங்களை தம் திணைக்களத்தலைவருக்கூடாகச் சமர்ப்பிக்க வேண்டும். இந்த விண்ணப்பகாரர்கள் தெரிவு செய்யப்படின் அவர்கள் சேவையிலிருந்து விடுக்கப்படுவார்கள் என்ற சான்றிதழ் ஒன்றும் சேர்த்து அனுப்பப்படல் வேண்டும்.

9. **விண்ணப்பங்கள்.**—விண்ணப்பங்கள் கீழ் கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தில் எழுதப்பட்டு 1969 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 15 ம் திகதி மத்தியானம் 12 மணிக்குப் பிந்தாமல் இராணுவத் தலைமை நிலையம், தபால் பெட்டி இலக்கம் 553, கொழும்பு என்ற முகவரியில் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பத்தையுடைய கடிதவுறையின் மேற்பக்கத்தில் "இராணுவத்தில் பயிலுநர் படைப்பயிற்சிக்கான விண்ணப்பம்" என எழுதப்படல் வேண்டும். முடிவுத்திகதிக்குப் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பப்படிவங்கள் வழங்கப்படமாட்டா.

10. விண்ணப்பங்கள் பின்வருவனவற்றின் பிரதிகளுடன் இருத்தல் வேண்டும்.

(அ) பிறப்புச் சான்றிதழ்,

(ஆ) கல்வித் தகைமைகளுக்கான சான்றிதழ்,

(இ) விண்ணப்பகாரருடன் பரிச்சயமுடைய பொறுப்புவாய்ந்தவர்களினால் வழங்கப்பட்ட குறைந்தபட்சம் இரு குணச்சான்றிதழ்கள் இவற்றில் ஒன்று கடைசியாகக் கல்விபயின்ற பாடசாலையின் தலைமையாசிரியரினால் வழங்கப்பட்டதாகவிருத்தல் வேண்டும்.

11. மேலே கூறிய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பகாரர்களிலிருந்து தொடக்கத் தெரிவு செய்யப்படும். தெரிவு செய்யப்படும் விண்ணப்பகாரர்கள் இராணுவ தளபதியினால் விதிக்கப்படும் பரீட்சைகளுக்கு உள்ளாதல் வேண்டும். இதன் பின் இறுதித் தெரிவு, தெரிவு செய்யப்பட்டவர்களிலிருந்து, பாதுகாப்பு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால் நியமிக்கப்படும் தேர்வுச்சபையொன்றினால் நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படும்.

13. தேர்வுச் சபைகளினால் நேர்முகப்பரீட்சைக்குத் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பகாரர்களுக்கு அத்தகைய நேர்முகப்பரீட்சைகளின் இடம், நேரம், திகதி என்பன எழுத்து மூலம் அறிவிக்கப்படும். நேர்முகப்பரீட்சைகள் கொழும்பில் நடாத்தப்படும். இத்தொடர்பில் எவ்விதப் பிரயாணச் செலவோ அல்லது பிற செலவுகளோ இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்படமாட்டாது.

எம். ஏ. ஜயவீர,
பிரிகேடியர்,
இராணுவத்தளபதிக்காக.

கொழும்பு,
1969 ம் ஆண்டு செப்டெம்பர் மீ 19 ந உ.

**இலங்கை இராணுவத்தில் பயிலுநர் படைப்பயிற்சிக்கான விண்ணப்பம்**

1. முழுப்பெயர் (தடித்த எழுத்துக்களில்) : ———.

2. முகவரி : ———.

3. தேசிய இனம் : ———.
(பரம்பரைவழியான இலங்கைப்பிரசையா அல்லது பதிவுமூலம் இலங்கைப்பிரசையா என்பதைக் குறிப்பிடவும். பதிவு மூலம் இலங்கை பிரசையாயின் சான்றிதழின் இலக்கத்தையும் திகதியையும் குறிக்கவும்)

4. (i) பிறந்த திகதி : ———.
(பிறப்புச்சான்றிதழின் பிரதி இணைக்கப்படல் வேண்டும். சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது கல்விப்பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது).

(ii) 1969 ம் ஆண்டு அக்டோபர் 15 ந் திகதியன்று வயது—
வருடம் : ——— மாதம் : ——— நாள் : ———

5. அருகாமையில் உள்ள பொலிசு நிலையம் : ———.

6. தந்தையாரின் பெயரும் தேசிய இனமும் : ———.
(குடியுரிமை வழங்கப்பட்டவரானால் சான்றிதழின் இலக்கமும் திகதியும் கொடுக்கப்படல வேண்டும்) : ———.

7. தாயின் பெயரும் தேசிய இனமும் : ———.

8. கீழ்க்காணும் பாடசாலை விபரங்களைத்தருக—

| பயின்ற பாடசாலையின் பெயர் | சேர்ந்த திகதி | விலகிய திகதி | பொதுப் பரீட்சைகளும் சித்தியெய்திய பாடங்களும் |
|---|---|---|---|
| | | | |

9. பாடசாலையில் உடற்பயிற்சி விளையாட்டுகளில் நீர் பெற்ற தனிச்சிறப்புகள் : ———.

10. பாடசாலையில் நீர் சிறந்து விளங்கிய பிற துறைகள் : ———.

11. இலங்கை சுயேச்சைப்படை, இலங்கை சாரணர்படை, இலங்கை பயிலுநர்படை முதலிய சுயேச்சை நிறுவகங்களில் இருந்திருப்பின் அவற்றின் சேவை விபரம் : ———.

12. இதற்கு முன் படைக்கலந்தாங்கு சேவைகளுக்கு விண்ணப்பித்திருப்பின் அதன் முடிவு : ———.

13. பாடசாலையைவிட்டு விலகியபின் செய்த தொழில் : ———.

14. குணச்சான்றிதழ்கள் வழங்கியவர்களின் பெயரும் முகவரியும் :
(அ) ———.
(ஆ) ———.

15. வேறேதேனும் பொருத்தமான விடயங்கள் : ———.

மேலே தரப்பட்ட வினாக்களுக்கு என்னால் கொடுக்கப்பட்ட விடைகள் அனைத்தும் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரை சரியானவையென்றும் நான் உறுதிப்படுத்துகிறேன். இராணுவத்தின் படைப் பயிற்சிக்கான எல்லாச்சேவை நிபந்தனைகளையும் வாசித்து விளங்கிக் கொண்டேன். அத்துடன் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இந்த உத்தியோகத்தர்களுக்கான சம்பளம், வாய்ப்புகள், சேவை நிபந்தனைகளையும் அறிந்துகொண்டேன்.

———.
(விண்ணப்பகாரரின் கையொப்பம்)

திகதி : ———.

9—1004—26.9.1969 ந் திகதிய வர்த்தமானி இல. 14,873

## இலங்கை அரச கடற்படை

### பண்டசாலை உதவிப் பொறுப்பாளர் பதவி

இலங்கை அரச கடற்படையில் பண்டசாலை உதவிப் பொறுப்பாளர் பதவி ஒன்றிற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **சம்பளம்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் வருடமொன்றுக்கு ரூபா 1,320—72—2,688/- ஆகும்.

3. **வேண்டப்படும் கல்வித் தகைமைகளும் பிறவும்.**—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் பின்வரும் தகைமைகளைக் கட்டாயம் கொண்டிருத்தல் வேண்டும் :—

(i) (அ) விண்ணப்பதாரர் சிரேட்ட தராதரப் பத்திரம் பெற்றிருக்க வேண்டும் ; அல்லது

(ஆ) கல்விப் பொதுத் தராதர (சாதாரணதர) ப் பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாது, சிங்களம்/தமிழ் அத்துடன் எண் கணிதம்/கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும் ; அல்லது

(இ) வேறு ஏதாவது உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

(ii) களஞ்சிய வேலையிலும் கணக்கியலிலும் நல்ல அறிவு இருப்பதோடு அரசாங்கத் திணைக்களத்தில் அல்லது பிரபலமான தொழில் தாபனத்தில் ஐந்து வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும். கடற்படையிலும் எந்திரவியற் களஞ்சியத்திலும் அனுபவமிருப்பின், அவ்வனுபவம் மேலதிக தகைமையாகக் கணிக்கப்படும்.

4. **மேலும் வேண்டப்படும் பிற தகைமைகள்.**—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் பின்வரும் தகைமைகளையும் கட்டாயம் கொண்டிருத்தல் வேண்டும் :—

(i) விண்ணப்பதாரர் 1969.10.10 ஆம் தேதியன்று 35 வயதிற்கு மேற்படாதவராக இருக்கவேண்டும். (ஏற்கனவே அரசாங்கசேவையில் உள்ளவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டெல்லை அமையாது)

(ii) சிறந்த நல்லொழுக்கம் உடையவராகவும் உடல் நலமுடையவராகவும் இருக்க வேண்டும்.

5. **ஒப்பந்த நியதிகள் :**

(i) பதவி நிரந்தரமானதும், இளைப்பாற்றுச் சம்பளம் பெறுவதற்கு உரித்துள்ளதுமாகும். விதவைகளினதும் அனாதைகளினதும் இளைப்பாற்றுச் சம்பளத்திட்டத்திற்கு உதவுதொகை அளிக்கப்படல் வேண்டும்.

(ii) தெரிவு செய்யப்படும் அபேட்சகர் குறுகிய கால அறிவித்தலின் பேரில் கடமையேற்குமாறு வேண்டப்படுவதுடன், அவர் இலங்கையின் (தீவின்) எப்பாகத்திலேனும் கடமையாற்றத் தயாராகவும் இருக்க வேண்டும். தற்பொழுது உள்ள வெற்றிடம் திருகோணமலையில் ஆகும்.

6. **சேவை நிபந்தனைகள்.**—தேர்ந்தெடுக்கப்படும் அபேட்சகர் அரசாங்க சேவையில் புதிதாகச் சேருபவராக இருந்தால் அரசகரும மொழிக் கொள்கையின் கருத்திற்கமைய—

(i) அவரின் தகுதிகாண் காலம் 3 வருடங்களாக இருக்கும்.

(ii) அவர் 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை செயற்படுத்தும் பொருட்டும், இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும், இணங்கி ஒழுகுவார் என்ற நிபந்தனைகட்கு உட்படல் வேண்டும்.

(iii) அரசகரும மொழியான சிங்களத்தில் கடமையாற்றுவதற்குரிய ஆற்றல் தகுதிகாண் காலவெல்லைக்குள் கீழே உள்ள பகுதி (iv) இல் காட்டியவாறு பெறவேண்டும்.

(iv) தகுதிகாண் காலவெல்லையின் இறுதியில் பதவியில் உறுதிப்படுத்தலானது, பிறவற்றுள், நியமனத் திகதியிலிருந்து முதல் வருடத்தில், இரண்டாம் வருடத்தில், மூன்றும் வருடத்தில் முறையே முதலாம் தரம், இரண்டாம் தரம், மூன்றும் தரம் (சிங்களத் தேர்ச்சிச் சோதனையில்) சித்தியெய்துதலைப் பொறுத்திருக்கும். விதிக்கப்பட்ட சோதனைகளில் விதிக்கப்பட்ட காலவெல்லைக்குள் சித்தி எய்தத் தவறுகை சம்பள ஏற்றங்கள் இடைநிறுத்தப்படும் விளைவை உண்டாக்கும். விதிக்கப்பட்ட காலவெல்லைக்கு அப்பால் மேலும் ஆறு மாத காலவெல்லைகளுள் அவ்வச் சோதனையிற் சித்தியெய்தத் தவறின், இடைநிறுத்துகையானது நிறுத்துகையாக மாற்றப்படுவதுடன் சோதனையில் சித்தியெய்தப்படும் வரை அத்தகைய நிறுத்துகை தொழிற்படுவதுமாகும்.

(v) தகுதிகாண் காலவெல்லையின் இறுதியில் சிங்களத்தில் விதிக்கப்பட்ட தேர்ச்சித் தரம் அடையப் பெறுவிடின் 120 ஆம், 121 ஆம் நிருவாகப் பிரமாணங்களின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாகும்.

7. விண்ணப்பதாரர் தமது விண்ணப்பத்துடன் பின்வருவனவற்றின் பிரதிகளையும் இணைத்தல் வேண்டும் :—

(i) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (ஞானஸ்நானச் சான்றிதழோ அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளின் பிரமாணத்திற்காக வழங்கப்படும் சான்றிதழ்களோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(ii) மிக உயர்ந்த கல்வித் தராதரங்களுக்குப் பெற்ற சான்றிதழ்.

(iii) முன்னைய அனுபவ சான்றிதழ்.

(iv) அண்மையில் பெற்ற ஒழுக்க சான்றிதழ்கள் இரண்டு (ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ள அபேட்சகர்கள் அத்தாட்சிப்பத்திரங்கள் சமர்ப்பிக்க வேண்டியதில்லை).

மேலே கேட்கப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படாது கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8. அரசாங்க வர்த்தமானியின் பகுதி I, தொகுதி II இன் தொடக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவையினுள்ள பதவிகளுக்கு ஏற்புடைய பொது நிபந்தனைகளின்பால் யாபேரதும் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

9. அரசாங்க சேவையில் இருப்பவர்கள் தங்கள் விண்ணப்பங்களை பொறுப்புவாய்ந்த திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

10. மேலே. வேண்டப்பட்டுள்ளவாறு முன்னைய அனுபவம், முன் செய்த தொழில் ஆகியவை பற்றிய முழு விபரங்களும் காட்டப்பட்டு, விண்ணப்பங்கள் பதிவுத் தபால் மூலம் குடியியல் நிருவாக அலுவலரும் கணக்காளரும், இலங்கை அரச கடற்படை, அஞ்சற் பெட்டி 593, கொழும்பு 1 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பத்தைக் கொண்ட கடிதவுறையில் இடது புற மேல் மூலையில் "பண்டசாலை உதவிப் பொறுப்பாளர் பதவிக்கான விண்ணப்பம்" என எழுதப்பட்டு 1969 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 10 ஆம் தேதியன்றோ அதற்கு முன்னரோ குடியியல் நிருவாக அலுவலரும் கணக்காளரும் என்பவருக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

ஈ. ஆர். சமரசேகரா,
குடியியல் நிருவாக அலுவலரும் கணக்காளரும்,
கடற்படைத் தளபதிக்காக.

தலைமை அலுவலகம்,
இலங்கை அரச கடற்படை,
கொழும்பு 1,
1969 ம் ஆண்டு செப்ரெம்பர் மீ 17 ந் உ.

9–1002—26.9.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,873

---

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### கண்டிய நடனப் பரிசோதகர் பதவிகள்

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சிலுள்ள கண்டிய நடனப் பரிசோதகர் பதவிகளுக்கு கீழே விதிக்கப்பட்டுள்ள தகைமைகளைப் பெற்றுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவ முறையில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு " நிரந்தரக் காரியதரிசி, கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு (பொது நிர்வாகக் கிளை), மலாய் வீதி, கொழும்பு 2 " என்ற விலாசத்துக்கு 1969 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 11 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்பட வேண்டும்.

2. **சம்பள அளவுத் திட்டம்**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டம் வருமாறு :—ரூபா 1,980—120 × 16—3,900 வருடாந்தம். வருடாந்தச் சம்பளம் ரூபா 2,820 பெறமுன் வினைத்திறமைகாண் தடை ஒன்றுண்டு.

3. **நியமன நியதிகள்**—

(i) இப்பதவிகள் நிரந்தரமானவையும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையனவுமாகும். நியமனம், முதற்கண், மூன்று வருட காலத்துக்குத் தகுதிகாண் முறையில் அமையும்.

(ii) விதவைகள், அநாதைகள் இளைப்பாற்றுச் சம்பளத் திட்டத்துக்குக் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும். பெண் ஒருவர் நியமிக்கப்படின் அது அரசாங்க சேவை சகாய நிதி நலன்களுக்கு அவர் உரித்துடையராவர் ; இந்நோக்கத்திற்கு அரசாங்க சேவை சகாய நிதிக்கு அவர் தமது சம்பளத்தில் 5% செலுத்த வேண்டும். பெண் உத்தியோகத்தர் ஒருவர் 10 வருட சேவையைப் பூர்த்தி செய்யமுன் எந்நேரத்திலேனும் அவர் சேமலாப நிதிக்குத் தொடர்ந்து கட்டணம் செலுத்தவா அல்லது இளைப்பாற்றுச் சம்பளத் திட்டத்துக்கு மாற்றப்படவா விரும்புகிறார் என அறிவிக்க வேண்டும். பாடசாலை ஆசிரியர் இளைப்பாற்றுச் சம்பள விதிகளின்

கீழ் அல்லது சேமலாப நலன்களைக் கொண்ட ஒரு பதவியில் அல்லது இவ்விரண்டின் கீழும் ஏற்கனவே அவர் 10 வருட சேவை பூர்த்தி செய்திருப்பின், நியமிக்கப்படும் ஆறு மாத காலத்திற்குள் தனது விருப்பத்தைத் தெரிவிக்க வேண்டும்.

(iii) நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதுமான ஒரு பதவியை ஏற்கனவே வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவர் தெரிவு செய்யப்படுமிடத்து, முதற்கண், அவர் பதில் கடமை புரிபவராக நியமிக்கப்படுவார்.

4. **சேவை நிபந்தனைகள்.**—அரசினர் சேவையில் புதிய முறைப்படி நியமனம் பெறும் ஒருவரைப் பொறுத்தவரையில், அரசகரும மொழி நோக்கங்களின் பொருட்டு—

(i) அவருடைய தகுதிகாண்/பரீட்சார்த்த காலம் மூன்று வருடங்களாகும்.

(ii) அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை நடைமுறையில் கொண்டுவருதற்கு, குறிப்பாக, 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்தும் பொருட்டு ஏற்கனவே ஆக்கப்பட்ட அல்லது இனிமேல் ஆக்கப்படும் விதிகளுக்கமைய ஒழுக வேண்டும்.

(iii) தகுதிகாண்/பரீட்சார்த்த காலத்துக்குள் அவர் சிங்களத்தில் தேர்ச்சி பெற வேண்டும்.

(iv) நியமதாரி, தகுதிகாண்/பரீட்சார்த்த கால முடிவில் உறுதிப்படுத்தப்படுதல், ஏனைய நிபந்தனைகளுடன், நியமனத் திகதியிலிருந்து முறையே ஒரு வருட, இரண்டு வருட, மூன்று வருட காலத்துக்குள் I ந் தர, II ந் தர, III ந் தர சிங்கள தேர்ச்சிப் பரீட்சையில் (I ந் தர, II ந் தர பரீட்சையில் ஒரு வருடத்தில் அல்லது இரண்டு வருடங்களில், காரியத்துக்கேற்ப) சித்தியடைதலைப் பொறுத்ததாகும். விதிக்கப்பட்ட காலத்துக்குள் இப்பரீட்சைகளில் சித்தியடையத் தவறின் சம்பள உயர்ச்சிப் பணம் இடைநிறுத்தம் செய்யப்படும்; விதிக்கப்பட்ட காலத்திலிருந்து 6 மாத காலத்துக்குள் இப்பரீட்சையில் சித்தியடையத் தவறின் இடைநிறுத்தம் செய்யப்பட்ட உயர்ச்சிப்பணம் நிறுத்தப்படும். இங்ஙனம் நிறுத்தப்பட்ட உயர்ச்சிப் பணம் குறித்த பரீட்சையில் அவர் சித்தியடையும்வரை அல்லது கீழே (V) ம் பந்தியில் கொடுத்துள்ள ஏற்பாடுகள் அமையும் காலம்வரை நிறுத்தி வைக்கப்படும்.

(v) சிங்களத்தில் தேவைப்படும் தேர்ச்சி தகுதிகாண்/பரீட்சார்த்த கால முடிவில் பெற்றுக் கொள்ளப்படாவிட்டால் நிர்வாக விதிகள் இல. 120, 121 ஆகியவற்றின் கீழுள்ள ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

(vi) தெரிவு செய்யப்படுபவர் அரசினர் சேவை ஆணைக்குழு விதிகள், நிர்வாக விதிகள், நிதி விதிகள், இவ்வமைச்சால் விடுக்கப்படும் கட்டளைகள், அரசாங்கத்தால காலத்துக்குக் காலம் விடுக்கப்படும் வேறு யாதேனும் கட்டளைகள் ஆகியவற்றிற்கு அமைய வேண்டும்.

(vii) வருடாந்தச் சம்பளம் ரூபா 2,820 இல் விதிக்கப்பட்டுள்ள வினைத்திறமைகாண் தடைக்கு மேலே செல்தற்கு அவர் சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது உயர்ந்த பரீட்சையில் சிங்கள மொழியில் அல்லது சிங்கள இலக்கியத்தில் சித்தி அடைய வேண்டும். அங்ஙனம் சித்தியடையத் தவறுமிடத்து அவரது சம்பள உயர்ச்சிப் பணம் பிற்போடப்படும்.

(சிங்கள மொழி மூலம் தெரிவு செய்யப்படுபவர்களுக்கு மேற்போந்த (iii), (iv), (v) ம் உப பந்திகளில் கொடுபட்டுள்ள நிபந்தனைகள் அமையா).

5. **தேவைப்படும் தகைமைகள்:**

(அ) 11.10.1969 அன்று 25 வயதுக்குக் குறையாதவராயும் 40 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். (அரசினர் சேவையில் ஏற்கனவே உள்ளவர்களுக்கு இவ் வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது).

(ஆ) சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் ; அல்லது இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றி, சிங்கள மொழி, எண்கணிதம்/கணிதம் ஆகிய பாடங்கள் உட்பட ஆறு பாடங்களில் கல்விப் பொதுத் தராதர (சாதாரணதர) பத்திரப் பரீட்சையில் ; அல்லது
சமனான அல்லது உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

(இ) அரசினர் நடன, நாட்டிய நடனக் கல்லூரியில் வழங்கப்படும் தகுதித் தேர்வுப் பத்திரம் அல்லது அரசினர் சங்கீத/நடனக் கல்லூரியால் வழங்கப்படும் இறுதித் தராதரப் பத்திரம் பெற்றிருக்க வேண்டும்.

(ஈ) 5 (இ) ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள தகைமைகளைப் பெற்றபின் நடனம் கற்பிப்பதில் (ஆசிரியராக) குறைந்த பட்சம் 5 வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

(உ) சிறந்த நல்லொழுக்கமும் உடல்நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

**குறிப்பு :**—சங்கீதத்திலும் இந்திய நடனத்திலும் தராதரப் பத்திரங்கள் பெற்றிருக்கும் அபேட்சகர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

6. விண்ணப்பதாரிகள், தங்கள் விண்ணப்பங்களுடன் பின்வரும் சாதனங்களின் பிரதிகளை (மூலங்களையல்ல) இணைத்தனுப்ப வேண்டும் :—

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (**குறிப்பு**—ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குச் சட்டங்களின் நோக்கத்திற்கெனக் கொடுபடும் பிறப்புச் சாட்சிப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா).

(ஆ) ஆகக்கூடிய கல்வித் தராதரப் பத்திரங்களும் உயர் தொழிற் தராதரப் பத்திரங்களும் அல்லது இவைகளில் எவையேனும்.

(இ) விண்ணப்பதாரியின் கல்வித் தகைமைகள், ஒழுக்கம், இப்பதவிக்கான தகுதி ஆகியவற்றைக் குறிப்பிடும் மூன்று சமீபகால குணச்சான்றிதழ்கள்.

**குறிப்பு :**—ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ள அபேட்சகர்கள் இவ்வுப பிரிவில் கேட்கப்பட்டுள்ள குணச்சான்றிதழ்களை அனுப்ப வேண்டியதில்லை.

7. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ம் பாகம், II ம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

8. அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படமாட்டா. கீழே கொடுபட்டுள்ள மாதிரிப் படிவ முறையில் விண்ணப்பப் படிவங்கள் தயாரிக்கப்பட வேண்டும்.

9. அரசினர் சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் விண்ணப்பங்கள் தத்தம் பகுதித் தலைவர்கள் மூலம் அனுப்பப்பட வேண்டும். விதிக்கப்பட்டுள்ள திகதிக்குப் பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் எவ்விண்ணப்பமும், விதிக்கப்பட்ட திகதிக்கு முன்னர் உரிய பகுதித்தலைவரால் பெற்றுக் கொள்ளப்பட்டதென்றும் நியாயமான காரணங்களைக் காட்டி அதனை ஏற்றுக்கொள்ளும்படி அவர் சிபார்சு செய்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

10. சகல விண்ணப்பங்களும் பெற்றுக் கொள்ளப்பட்டதும் அவை பெற்றுக் கொள்ளப்பட்டதாக விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படுவார்கள். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைகளுக்குள் பெறத்தவறும் விண்ணப்பதாரிகள் அது பற்றி " நிரந்தரக் காரியதரிசி, பொது நிர்வாகக் கிளை, கல்வி கலாச்சார அலுவல்கள் அமைச்சு, கொழும்பு 2 " என்ற விலாசத்துக்கு அறிவிக்க வேண்டும். இவ்வேற்பாட்டின் பிரகாரம் ஒழுகத் தவறும் அபேட்சகர்கள் தனது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

11. மேற்குறித்த பதவிகள் சம்பந்தமாக 29.11.68 ஆந் திகதிய 14,830 ம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானியில் வெளியான விளம்பரம் நிராகரிக்கப்பட்டதாகக் கருத்திற்கொள்க.

நிரந்தரக் காரியதரிசி,
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு.

இல. பொ. நி. 22/128,
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
1969 ம் ஆு செப்ரெம்பர் மீ 13 ந் உ.

## மாதிரி விண்ணப்பப் படிவம்

### கண்டிய நடனப் பரிசோதகர் பதவிக்கான விண்ணப்பம்

1. முழுப்பெயர் (தெளிவாக எழுதவும்) : ————.
2. தபால் விலாசம் : ————.
3. 11.10.1969 அன்று உள்ளபடி சரியான வயது :
வருஷம் :———— மாதம் :———— நாள் :————
4. சாதியமும் அது எங்ஙனம் பெறப்பட்டதும் : ————.
5. பின்வருவோர் பிறந்த இடம்—
(அ) விண்ணப்பதாரி : ————.
(ஆ) விண்ணப்பதாரியின் தகப்பன் : ————.
(இ) விண்ணப்பதாரியின் தகப்பன்வழிப் பாட்டன் : ————.
(ஈ) விண்ணப்பதாரியின் தகப்பன்வழிப் பூட்டன் : ————.

6. சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையிலோ அல்லது சமனான வேறு பரீட்சையிலோ அல்லது வேறு உயர்ந்த பரீட்சையிலோ நீர் சித்தியடைந்தீர் ? (தராதரப் பத்திரத்தின் பெயரையும் அது எம்மொழிமூலம் எனவும் குறிப்பிடவும்—தராதரப் பத்திரத்தின் பிரதி இணைக்கப்பட வேண்டும்) : ———.

7. கண்டிய நடனத்தில் பெற்றுள்ள தகைமைகள் : ———.

8. சிங்கள மொழியில் பெற்றுள்ள அறிவு : ———.

9. படித்த பாடசாலைகளும் கல்லூரிகளும் : ———.

10. தற்போதைய உத்தியோகம் பற்றிய விபரங்கள் (ஆசிரியராயின், பதிவிலக்கம், பாடசாலைப் பெயர், தற்போதைய வருடாந்தச் சம்பளம், சம்பள விகிதம், அடுத்த சம்பள உயர்ச்சித் திகதி ஆகியவற்றைக் குறிப்பிடுக) : ———.

11. கண்டிய நடனம் கற்பிப்பதில் பெற்றுள்ள அனுபவம் : ———. (விபரங்களைக் கீழ்க்காணும் முறையில் கொடுக்கவும்)

| பாடசாலைப் பெயர் | வகித்த பதவி | சேர்ந்த திகதி | விலகிய திகதி | சேவைக்காலம் | | | விலகிய காரணம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | வரு. | மா. | நா. | |
| | | | | | | | |

மொத்தம் :

12. யுத்த சேவை யாதேனும் இருப்பின், விபரங்கள் : ———. (விலக்கற் பத்திரத்தின் பிரதி இணைக்கப்பட வேண்டும்)

13. குணச்சான்றிதழ்கள் கொடுத்துதவியவர்களின் பெயர்களும் (இவர்கள் உறவினர்களாயிருக்கலாகாது) பதவிப் பெயர்களும். குணச்சான்றிதழ்களின் பிரதிகள் (மூலங்களல்ல) இணைக்கப்பட வேண்டும் (அரசினர் சேவையிலுள்ளவர்கள் இவற்றையனுப்ப வேண்டிய தில்லை) : ———.

14. வேறு யாதேனும் விபரங்கள் : ———.

இவ்விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதியளிக்கின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமிக்கப்படுதற்குப் பின்னராயின் எவ்வித நஷ்ட ஈடின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

———
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ———.

9—823—26.9.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,873

---

இல. வெ. மு./3/136

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### உலக வாலிபர் மன்றம் — 1969 ஆம் ஆண்டு — நியூ யோக்

நியூ யோக்கில் 1970 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் மார்ச் மாதம் வரை நடைபெறவிருக்கும் 1970 ஆம் ஆண்டு உலக வாலிபர் மன்றத்துக்கு ஒரு பிரதிநிதியைத் தெரிவு செய்யும் பொருட்டு அரசினர் பாடசாலைகளிலும் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலைகளிலும் க. பொ. த. (உயர்தர) பத்திர முதல் வருட வகுப்புகளிலுள்ள மாணவர்களிடமிருந்து (இரு பாலாரிடமுமிருந்து) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **நோக்கங்களும் இலக்குகளும்.**—மன்றத்தின் ஆதரவில், உலகத்தின் பல்வேறு நாடுகளிலுமிருந்து மாணவர்கள் ஐக்கிய அமெரிக்காவைத் தரிசித்து, பகிரங்க கலந்துரையாடல்கள், கருத்தரங்குகள், வீடுகளில் தங்குதல், பாடசாலைகளைத் தரிசித்தல், ரெலிவிசன் நிகழ்ச்சிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய பல்வேறு விடயங்களில் பங்குகொள்வர். பல தரப்பட்ட பார்வையாளர்களுக்கு இவ்விடயங்கள் அவைகளில் பங்கு பற்றும் மாணவர்களின் சுய, விவேக, கலாச்சார பின்னணிகளை விளக்குவதற்கு ஏதுவாக அமையும். மேலும், அமெரிக்கக் குடும்பங்களுடன் வாழ்ந்து அந்நாட்டுக் கல்வி, அரசாங்க முறைகளை அவதானிப்பதற்கும் தனது நாட்டு விடயங்கள் பற்றி பகிரங்க கலந்துரையாடல்களில் கலந்து கொள்தற்கும் மற்றத் தேசங்களிலிருந்து வரும் வாலிபர்களுடன் கூடி அனுபவம் பெறுதற்கும் இம்மன்றத்தில் கலந்து கொள்பவர்களுக்கு வாய்ப்புகள் கிடைக்கின்றன.

1970 ஆம் ஆண்டு மன்றத்துக்கு 30 — 40 தேசங்களிலிருந்து பிரதிநிதிகள் நியூ யோக்கில் கூடுவர். இலங்கை முழுவதும் நடைபெறும் ஒரு போட்டி மூலம் ஒருவரைத் தெரிந்தெடுத்து இந்நாட்டு பிரதிநிதியாக இலங்கையும் அனுப்ப வேண்டும். ஒரு நாட்டிலிருந்து ஒரு பிரதிநிதியே அனுப்பப்படுவதால் தெரிவு செய்யப்படும் பிரதிநிதி அந்நாடு அனுப்பக்கூடிய மிகச் சிறந்தவராய் இருக்கவேண்டும். ஆகையால் விண்ணப்பதாரிகள் இலங்கையின் சரித்திரம், பழக்க வழக்க முறைகள், சமூக, பொருளாதார, கலாச்சார, அரசியல் விடயங்களில் விரிவான அறிவு பெற்றுள்ளவராயும், ஆங்கில மொழியில் உயர்ந்த தேர்ச்சி பெற்றவராயும் இருக்க வேண்டும்.

3. **நிகழ்ச்சி நிரலும் திகதிகளும்.**—இம்மன்றம் 1970 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 5 ஆந் திகதி தொடக்கம் ஒரு வாரம் அறிமுகப்படுத்தும் நிகழ்ச்சிகளுடன் ஆரம்பமாகி 1970 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16 ஆந் திகதி முடிவடையும். மன்ற நிகழ்ச்சிகள் முடிவடைந்து ஐரோப்பா வழியாகத் தமது நாடுகளுக்குத் திரும்பிச் செல்லும் பிரதிநிதிகள் சுவிற்சலாந்தில், ஜெனிவா நகரில் அகில தேச முகவாண்மை நிலையத்தில் மார்ச் மாதம் 17 ஆந் திகதி தொடக்கம் 25 ஆந் திகதிவரை நடைபெறும் நிகழ்ச்சிகளில் பங்குபற்றும்பொருட்டு அங்கு தங்குவார்கள்.

4. **இவ்வளிப்பின் கீழுள்ள நயங்கள்.**—தெரிவு செய்யப்படும் அபேட்சகருக்கு இலங்கையிலிருந்து நியூயோக்குக்குப் போய்வருவதற்கான ஆகாய விமான இலவசப் பிரயாணச் சீட்டு வழங்கப்படும். உணவு, உறையுகம் ஆதியன ஐக்கிய அமெரிக்க நாட்டின் விருந்தளிக்கும் குடும்பங்களால் வழங்கப்படும்.

5. **தகவுத்திறன்.**—அபேட்சகர்கள் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் :—

(அ) இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும் ;

(ஆ) ஓர் அரசினர் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பாடசாலையில் க. பொ. த. (உயர்தர) பத்திர முதல் வருட வகுப்பு மாணவராக இருக்க வேண்டும் ;

(இ) தனது வகுப்பில், படிப்பில் முதல் நான்கு பிள்ளைகளுக்குள் இருக்க வேண்டும் (வகுப்பில், ஒன்றுக்கு மேற்பட்ட பிரிவுகள் இருப்பின் அவை ஒருமித்துக் கணிக்கப்பட வேண்டும்) ;

(ஈ) 30.9.51 க்கும் 1.10.53 க்கும் இடையில் பிறந்தவராய் இருக்க வேண்டும் ;

(உ) க. பொ. த. (சாதாரணதர) பத்திரப் பரீட்சையில் ஆங்கில மொழியில் " அ " ஆம் பாடத் திட்டத்தின் கீழ் குறைந்த பட்சம் திறமைச் சித்தி பெற்றிருக்க வேண்டும் ;

(ஊ) ஆங்கிலம் பேசுவதிலும் எழுதுவதிலும் தெளிவாகவும் வாக்குச் சாதுரியம் உள்ளவராகவும் இருக்க வேண்டும் ;

(எ) பல்வேறு வெளி முயற்சிகளில் உற்சாகமாகப் பங்கு பெறுபவராய இருக்க வேண்டும் ;

(ஏ) பகிரங்க மன்றங்களிலும் கூட்டங்களிலும் ரெலிவிசன் நிகழ்ச்சிகளிலும், வகுப்பறைக் கலந்துரையாடல்களிலும் பங்குபற்ற ஆயத்தமாய் இருக்க வேண்டும் ;

(ஐ) உலக விடயங்கள் பற்றி நன்கு அறிந்திருப்பதுடன் அவற்றில் அக்கறை உள்ளவராகவும், சர்வதேச தற்கால பிரச்சனைகள் அறிந்தவராகவும், இலங்கை உலகின் மற்றப் பகுதிகளுடன் எவ்வித தொடர்பு கொண்டுள்ளது என்பது பற்றியும் மற்றத் தேசத்தவர்களையும், தேசங்களையும், அவைகளின் வாழ்க்கை முறைகளையும் அறிய ஆவல் உடையவராயும் இருக்க வேண்டும் ;

(ஒ) சிறந்த நல்லொழுக்கமும் கண்ணியமும் உள்ளவராகவும், மற்றவர்களுடன் ஒத்துழைக்கக்கூடியவராயும், மற்ற சாகியத்தினரின் கொள்கைகளையும், சமயங்களையும், அரசியல் தத்துவங்களையும் மதிப்பவராகவும், தனக்காக மற்றவர்களால் எடுக்கப்படும் முயற்சிகளை உணரும் தன்மையுடையவராயும், அவற்றைப் பாராட்டக் கூடியவராயும் இருக்க வேண்டும் ;

(ஓ) சிறந்த தேகாரோக்கியம் உடையவராயும், ஐக்கிய அமெரிக்காவில் 3 மாத கடும் உழைப்பைத் தாங்கக்கூடிய உடல்நலமுடையவராயும் இருக்க வேண்டும் ;

(ஔ) ஐக்கிய அமெரிக்காவுக்கு போய்வரும் செலவை சுலபமாகத் தாங்கிக் கொள்ளக்கூடிய ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவராய் இருக்கலாகாது ;

(க) இதற்குமுன் பிற தேசங்களுக்கு சென்றவராய் இருக்கலாகாது ;

(கா) தெரிவு செய்யப்படின் ஐக்கிய அமெரிக்காவுக்குப் போவதற்கு பெற்றோரின் அனுமதியைப் பெறக்கூடியவராய் இருக்க வேண்டும்.

(மேற்குறித்த தகைமைகளைத் திருப்தி செய்யாத அபேட்சகர்கள் விண்ணப்பிக்கலாகா).

6. **விண்ணப்பங்கள்.**—இவ்வமைச்சின் வெளிநாட்டு முகவராண்மைக் கிளையிலிருந்து பெறற்பாலனவான விசேட படிவத்தில், விண்ணப்பங்களைத் தமது சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பதாரி தயாரித்து, அவற்றை 14.10.1969 க்கு முன் கீழ்க்காணும் விலாசத்துக்கு கடுகதித் தபால் மூலம் அனுப்புமாறு பாடசாலை அதிபரை வேண்டி, பின்வரும் சாதனங்களுடன் விண்ணப்பத்தை அவரிடம் 10.10.1969 க்கு முன்னர் ஒப்படைக்க வேண்டும்.

"வெளிநாட்டு முகவராண்மைக் கிளை,
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2"

கடுகதித் தபாலின் முத்திரைச் செலவை பொறுக்க வேண்டுமென பாடசாலை அதிபர் வேண்டின் விண்ணப்பதாரி அச்செலவைக் கொடுக்க வேண்டும்.

விண்ணப்பங்களுடன் இணைக்கப்பட வேண்டிய சாதனங்கள் :—

(அ) பின்வரும் தகவல்களை உள்ளடக்கி, 700 — 1000 சொற்களில் ஆங்கில மொழியில் எழுதப்படும் சுயசரிதை.

(i) சொந்த வாழ்க்கை விபரமும் குடும்ப வாழ்க்கையும் ;
(ii) முக்கிய படிப்புகள், விசேட ஆர்வங்கள், சொந்த இயல்புகள் ;
(iii) ஈடுபடும் விளையாட்டுகளும் பொழுதுபோக்கு முயற்சிகளும் ;
(iv) திறமைகள் (வாய்ப்பாட்டு, நடனம், வாத்தியக் கருவி) ;
(v) சமய நம்பிக்கைகளும் அறநூல் மனோபாவமும் ;
(vi) தொழில் சம்பந்தப்பட்ட அபிலாசைகள்.
(தெரிவு செய்யப்பட்ட அபேட்சகரின சுயசரிதையை அபேட்சகர்களை விருந்தாளிகளாகக் கொள்ளும் அமெரிக்க குடும்பங்களுக்கும் மறறும் பிரதிநிதிகளுக்கும் அச்சீட்டு விநியோகிப்பதற்காக நியூ யோக்குக்கு அனுப்பி வைக்கப்படும்).

(ஆ) "எனது நாட்டில் நிலவுவதாக நான் கருதும் மிக முக்கியத்துவம் வாய்ந்த உள்ளூர்ப் (அகில தேச அடிப்படையிலல்ல) பிரச்சினையும் அதனைத் தீர்த்து வைக்கக்கூடிய வசதிகளும்" என்ற விடயம் பற்றி ஆங்கிலமொழி மூலம் 700 — 1000 சொற்களில் கட்டுரை ;

(இ) "எனது சந்ததியினர் அடுத்த இருபது வருடங்களுக்குள் தீர்த்து வைக்க வேண்டியதென நான் கருதும் மிகப் பாரதூரமான அகில உலகப் பிரசனை" என்ற விடயம் பற்றி ஆங்கில மொழியில் 700 — 1000 சொற்களில கட்டுரை ;

(ஈ) சிபார்சு செய்யும் மூன்று கடிதங்கள்—

(i) விண்ணப்பதாரியின் படிப்புத் திறமையைப் பற்றியும் ஒழுக்கம் பற்றியும் சான்று பகரக்கூடிய ஆசிரியர் ஒருவரிடமிருந்து ஒரு கடிதம் ;
(ii) விண்ணப்பதாரியைப் பல ஆண்டுகள் அறிந்திருந்த பொறுப்புவாய்ந்த இரு பெரியவர்களிடமிருந்து (இனத்தவரல்லாத) கடிதங்கள்.

குறிப்பு.—சுயசரிதையும் இரண்டு கட்டுரைகளும் விண்ணப்பதாரியின் சொந்த முயற்சியாகவே இருப்பதுடன் அவைகள் விண்ணப்பதாரியாலேயே ஆக்கப்பட்டவை என்று பாடசாலை அதிபர் அவை ஒவ்வொன்றிலும் அத்தாட்சிப்படுத்த வேண்டும். தெரிவு செய்யப்பட்டவரின் கட்டுரைகள் ஐக்கிய அமெரிக்காவுக்கு அனுப்பப்பட வேண்டியவை. எனவே அவை முழுத் தாள்களில் (இரண்டாக மடிக்கப்பட்டு அல்லது கிழிக்கப்பட்டு) ஒரு பக்கத்தில் மட்டும், இடதுபக்கத்தில் 1½ அங்குல ஓரம் விடப்பட்டு எழுதப்பட வேண்டும்.

விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி 14.10.69 ஆகும். தாமதித்து அனுப்பப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. பூரணமற்ற விண்ணப்பங்களும் இவ்விளம்பரத்துக்கமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் பெற்றுக் கொண்டமை பற்றி அறிவிக்கப்படும். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 7 நாட்களுக்குள் விண்ணப்பங்கள் பெற்றுக் கொண்டமை பற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் விண்ணப்பதாரிகள் இக்கந்தோருக்கு அது பற்றி உடனே அறிவிக்க வேண்டும்.

7. **தெரிவு.**—விண்ணப்பங்கள், சுயசரிதைகள், இரண்டு கட்டுரைகள் ஆகியவற்றை ஒரு குழு பரிசீலனை செய்து ஆரம்பத் தெரிவை நடாத்தும். இவ்வாறு செய்யப்படும் சிறு தொகையினரின் ஆங்கில பேச்சுத் திறனை, இலங்கை, உலக விடயங்கள் பற்றி முன்னேற்பாடின்றிப் பேசும் திறமை ஆகியவற்றைக் கணிப்பதற்காக கொழும்பில் ஒரு நேர்முகப் பரீட்சை மத்தியஸ்தர் குழு ஒன்றால் நடாத்தப்படும்.

மத்தியஸ்தர் குழுவினால் தெரிவு செய்யப்படும் ஒரு விடயம் பற்றி அவர்கள் முன்னிலையிலோ அல்லது அவர்களால் நியமிக்கப்படும் ஒரு மேற்பார்வையாளர் முன்னிலையிலோ கிட்டத்தட்ட 500 சொற்களில் ஒரு கட்டுரை எழுதுமாறு நேர்முகப் பரீட்சைத் தினத்தன்று வேண்டப்படுவர். விண்ணப்பதாரியின் ஆங்கில எழுத்துத் திறமையையும் பல விடயங்கள் பற்றிய அறிவையும் கணிப்பதாக இப்பரீட்சை அமையும். இக்கட்டுரையும் ஏற்கனவே விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரைகளுடன் ஒப்பிட்டு ஆராயப்படும்.

8. தெரிவு தொடர்பாக எவ்விதமேனும் ஆதரவு வேண்டுதல் அல்லது செல்வாக்குப் பிரயோகித்தல் போன்ற காரணத்தைக் கொண்டே விண்ணப்பதாரி தகுதியற்றவராக்கப்படுவார்.

நிரந்தரக் காரியதரிசி,
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு.

வெளிநாட்டு முகவராண்மைக் கிளை,
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
1969 ம் ஆண்டு செப்ரெம்பர் மீ 17 ந் உ.

9-908—26.9.1969 ந் திகதிய வர்த்தமானி இல. 14,873

---

## பரீட்சைப் பகுதி

### உதவி அச்சாளர் பதவி

கொழும்பு 2, மலே வீதியிலுள்ள பரீட்சைப் பகுதியில் உதவி அச்சாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், கீழ்க் காணும் மாதிரிப்படிவ முறையில தயாரிக்கப்பட்டு பதிவஞ்சல் மூலம் 1969 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 15 ஆம் தேதியன்று அல்லது அதற்குமுன் கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்கள் யாவும் பெற்றுக்கொண்டமை பற்றி அறிவிக்கப்படும்.

2. **சம்பளம்.**—இப்பதவிக்குரிய சம்பளம் வருடமொன்றுக்கு ரூபா 2,220 தொடக்கம் ரூபா 3,780 வரையுமாகும். இது 120 ரூபாவுடைய 13 ஆண்டு ஏற்றச் சம்பளங்களையுடையது. ரூபா 3,060 இன் முன்னர் வினைத்திறமைகாண் தடை உண்டு.

3. **நியமன நியதிகள்.**—இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையதுமாகும். தெரிவு செய்யப்பட்டவர் மூன்றாண்டு காலத்துக்குத் தகுதி காண் நிலையில் கடமையாற்றுவர். நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையதுமான தாபனத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்ட ஒருவர் பதிலாகக் கடமையாற்றுபவராக நியமிக்கப்படுவார். வெளியிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட ஒருவர், உறுதிப்படுத்தப்படாவிடின், இவரது சேவை முடிவடைந்துவிடும். நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையதுமான தாபனத்தில் உள்ளவர் உறுதிப்படுத்தப்படாவிடின் அவரது நிலையான பதவிக்கே திருப்பி அனுப்பப்படுவர். நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையதுமான பதவியிலிருந்து வந்தவர் உறுதிப்படுத்தப்பட்டால் முனனைய பதவி வகிப்பதிலிருந்தும் நிறுத்தப்படுவர். மீண்டும் அப்பதவிக்குப் போகும் உரிமைபெற மாட்டாவர். தெரிவு செய்யப்பட்டவர், குறுகியகால அறிவித்தலின் பேரில நியமனத்தை ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

4. **தேவைப்படும் தகைமைகள்.**—ஒவ்வொருவரும் பின்வரும் தகைமைகளுக்குரிய சான்றுகளைக் காண்பித்தல் வேண்டும்.

(அ) 1969 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 15 ஆம் தேதியன்று 25 வயதுக்குக் குறையாமலும் 40 வயதுக்கு மேற்படாமலும் இருப்பவராய் இருத்தல் வேண்டும். அரசாங்க சேவையில் உள்ளவர்களின் மேலெல்லை வயது பற்றிய வரையறையில்லை.

(ஆ) சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் (சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கிலம்) உடையவராக அல்லது கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரணதர) ப் பரீட்சையில், இரண்டுக்கு மேற்படாத தடவைகளில், சிங்களம்/தமிழ்ப்பாஷை, எண்கணிதம்/கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்தவராகவும், மற்றைய இரு மொழிகளுள் ஒன்றிலாவது நல்ல அறிவுடைவராகவும் இருத்தல் வேண்டும்.

(இ) (i) அச்சுத் தொழிலில் 6 அல்லது அதற்கு மேற்பட்ட வருட செயல் முறை அனுபவமுடையவராயிருத்தல் வேண்டும்.

(ii) வேலை பங்கிடுதலிலும் தொழிலாளரைக் கையாள்வதிலும் செயல்முறை அநுபவமுடையவராயிருத்தல் வேண்டும்.

(ஈ) மிகச் சிறந்த நன்னடத்தையுடையவராயிருத்தல் வேண்டும்.

அச்சிடுதலில், இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியின் இறுதிச் தராதரப் பத்திரம் பெற்றுள்ளவர் மேலதிக தகைமையுடையவராகக் கருதப்படுவர்.

5. விண்ணப்பிப்பவர்கள் (i) தமது விண்ணப்பங்களுடன் பின்வருவனவற்றின பிரதிகளை (அவை திருப்பி அனுப்பப்பட மாட்டா) இணைத்தல் வேண்டும்.

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் ;

(ஆ) ஆங்கிலம் அல்லது சிங்களம் அல்லது தமிழில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைக்குரிய சான்றிதழ் ;

(இ) அச்சுத் தொழிலில் 6 அல்லது அதற்கு மேற்பட்ட வருட அநுபவத்தின் சான்றுகவுள்ள சாதனங்கள் ;

(ஈ) வேலை பங்கிடுவதிலும் தொழிலாளரைக் கையாள்வதிலும் உள்ள அநுபவத்தின் சான்றுகவுள்ள சாதனங்கள் ;

(உ) சமீபத்திற் பெற்ற மூன்று நற்சாட்சிப் பத்திரங்கள் (அரசாங்க சேவையிலுள்ளவர்கள் இப்பந்தியில் குறிப்பிடும் சான்றிதழ்களைச் சமர்ப்பிக்க வேண்டியதில்லை).

(ii) தமது நன்னடத்தை குறித்தோ பதவிக்குரிய தகுதி குறித்தோ நற்சான்றுப் பத்திரங்கள் அளிக்கக்கூடிய மூவரின் பெயர்களைத் தருக

6\. விண்ணப்பங்கள் அல்லது அவை சம்பந்தமான வேறெவையேனும் கடிதத் தொடர்புகள், பரீட்சாதிகாரி, மலே வீதி, கொழும்பு 2 என்ற முகவரிக்கு அனுப்பப்படுதல் வேண்டும். அவற்றை எனது சொந்த முகவரிக்கோ, இப்பகுதியிலுள்ள வேறெந்த உத்தியோகத்தரின் சொந்த முகவரிக்கோ அனுப்புதல் ஆகாது.

7\. இந்த வர்த்தமானியின் I ஆம் பகுதி, II ஆம் தொகுதி ஆரம்பத்தில் பிரசுரமாகியுள்ள அரசாங்க சேவைப் பதவிகளுக்கு பொருந்தும் பொது நிபந்தனைகளைப் பார்வையிடுக. இந்நிபந்தனைகளுக் கிணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

கே. ரீ. டபிள்யூ. சமணசூரிய,
பரீட்சாதிகாரி.

பரீட்சைப் பகுதி,
மலே வீதி, கொழும்பு 2,
1969 ம் ஆண்டு செப்ரெம்பர் மீ 19 ந் வ.

## குறிப்பிட்ட மாதிரிப்படிவம்

**பரீட்சைப் பகுதி, உதவி அச்சாளர் பதவிக்கான விண்ணப்பம்**

1\. முழுப்பெயர் :————.
(உறுப்-பெழுத்தில்)

2\. விலாசம் :————.

3\. தற்போதைய தொழிலும் அலுவலக விலாசமும் :————.

4\. (அ) இலங்கைப் பிரஜையா என்று கூறவும் :————.
(i) வம்சாவழிப் பிரஜை :————.
(ii) பதிவுப் பிரஜை—பதிவுப்பத்திர எண்ணைக் குறிப்பிடுக : ————.

(ஆ) பிறந்த இடம்—
(i) விண்ணப்பிப்பவர் :————.
(ii) விண்ணப்பபிப்பவரின் தந்தை :————.
(iii) விண்ணப்பிப்பவரின் தந்தை வழிப்பாட்டன் :————.
(iv) விண்ணப்பிப்பவரின் தந்தை வழிப்பூட்டன் :————.

5\. பிறந்த திகதி :————. வயது :————.

6\. (அ) கல்வித் தராதரங்கள் :————.
(சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கிலம்)
(ஆ) போதிய அறிவைப் பெற்ற மற்றைய மொழி :————.

7\. அச்சுத் தொழிலில் பெற்றுள்ள செயல்முறை அநுபவ காலம் : ————.

8\. வேலை பங்கிடுதலிலும் தொழிலாளர்களைக் கையாள்வதிலும் பெற்றுள்ள செயல்முறை அநுபவம் :————.

9\. அச்சிடுதலில் இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரி இறுதித் தராதரப் பத்திரமுடையவரா? :————.

10\. இணைக்கப்பட்டிருக்கும் நற்சான்றிதழ்களை வழங்கியவர்களின் பெயர்களும் விலாசங்களும் :————.

11\. நீர்—
(i) அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்பட்டவராகவோ நிறுத்தப்பட்டவராகவோ இருக்கிறீரா? :————.
(ii) நீதிமன்றமொன்றில் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளீரா? :————
(iii) அரசாங்க சேவையிலுள்ள யாதேனும் பதவியிலிருந்து விட்டு விலகியுள்ளீரா? :————.

12\. விண்ணப்பிப்பவரின் நேர்மை பற்றி நற்சான்றளிக்கக்கூடிய மூவரின் பெயர்களையும் விலாசங்களையும் தருக :————.

13\. இத்தேர்வுக்கு உதவக்கூடிய விசேட கோரிக்கைகள் எவையேனும் இருப்பின் அவற்றின் விபரங்களைத் தருக :————.

————.
விண்ணப்பிப்பவரின் கையொப்பம்.

திகதி :————.

9–989—26.9.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,873

---

## நில அளவைத் திணைக்களம்

**பண்டகசாலைப் பொறுப்பாளர் பதவி**

ஒரு பண்டகசாலைப் பொறுப்பாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களை இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் மாதிரிப் படிவம் போன்று தமது சொந்தக் கையெழுத்தில் தயாரித்து 69.10.12 ந் திகதியன்று அல்லது அதன் முன்னர் எமக்குக் கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

2\. எமக்குக் கிடைத்த விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்படும். விண்ணபதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்குத் தோன்றுமாறு அழைக்கப்படுவர்.

3\. விண்ணப்பங்களுடன் சான்றிதழ்களின் பிரதிகளை மட்டும் இணைத்தல் வேண்டும். நேர்முகப் பரீட்சையின்போது மூலப் பிரதிகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

4\. இப்பதவிக்குரிய சம்பள அளவு வருமாறு :—
ரூபா 888—(17 × 72) ரூபா 2,112 வருடாந்தம்.
ரூபா 1,608 க்கு முன் வினைத்திறமைகாண் தடை உண்டு.

5\. **வயது**.—விண்ணப்பதாரர்கள் 20 வயதுக்குக் குறையாதவர்களாகவும் 35 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருக்க வேண்டும்.

குறிப்பு.—இவ்வயதெல்லை அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்குப் பொருந்தாது.

6\. **கல்வியும் தகைமைகளும்**.—(1) கல்விப் பொதுத் தராதரப் பரீட்சையில் (சாதாரணம்) அல்லது சமமான பரீட்சையில இரண்டு முறைக்கு மேற்படாத தவணையில் கணிதம் அல்லது எண்கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(2) கணிக்கப்படும் தாபனத்தில் பண்டகசாலைப் பொறுப்பாளர் சேவையில் குறைந்தது மூன்று வருட அனுபவம் பெற்றவராக இருக்க வேண்டும்.

குறிப்பு.—காட் இன்டெக்சிங்முறை, இருப்பு, விநியோகம், நடைமுறைக் கணக்கு வைத்தல் ஆகியவற்றில் அனுபவம் பெற்றிருப்பது மேலதிகத் தகைமைகளாகும்.

7\. **நியமன நியதிகள்**.—இப்பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதுமாகும். வி. அ. உ. ஓய்வுத் திட்டத்திற்குப் பணவுதவிகள் செய்யப்படும்.

8\. **சேவை நிபந்தனைகள்**.—நியமனம் மூன்று ஆண்டுகள் தகுதிகாண் முறையில் அமையும். தெரிவு செய்யப்பட்டவர் இத்தீவின் எப்பகுதியிலும் சேவை செய்ய ஆயத்தமாக இருத்தல் வேண்டும். ரூபா 1,000 பிணை வைப்புப் பணமாகவும் ரூபா 4,000 பொறுப்புறுதிப் பணமாகவும் அளித்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்பட்டவர் 1956 ம் ஆண்டின் 33 ம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்திற்கும், 9.6.69 ந் திகதி இடப்பட்ட திறைசேரிச் சுற்று நிருபம் 765 (இல. 543—ஈ/302 டி) யில் காணப்படும் சட்டங்களுக்கும் அதன்பின் அரசாங்கத்தினுல் காலத்திற்குக் காலம் பிறப்பிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கும் அமைந்து நடத்தல் வேண்டும்.

அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்கு விதிகள், அரசாங்கப் பகுதி ஒழுங்கு விதிகள் ஆகியவற்றுடன அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் கட்டளைகளுக்கு அமையவே நியமனங்கள் இருக்கும்.

9\. அரசாங்க சேவையில் உள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ம் பாகம், II ம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றைப் பார்க்கவும்.

சீ. ரீ. குணவர்தன,
நில அளவையாளர் நாயகம்.

நில அளவை அலுவலகம்,
“ அபிவிருத்திக் கிளை ”,
த. பெ. எண் 506,
கிருல வீதி, கொழும்பு 5,
**1969 ம் ஆண்டு செப்தெம்பர் மீ 26 ந் வ.**

### விண்ணப்பப் படிவம்

**(தமது சொந்தக் கையெழுத்தில் பூர்த்தி செய்ய வேண்டும்)**

1. முழுப் பெயர் :————.
   (தெளிவான எழுத்துக்களில்)
2. தபால் விலாசம் :————.
3. (அ) பிறந்த திகதி :————.
   (பிறப்புச் சாட்சிப் பத்திரத்தின் பிரதியை இணைக்கவும்)
   (ஆ) 30.9.69 ந் திகதியன்று வயது :— வருடம் ........ மாதம் ........
4. தேசிய இனம் :
   (அ) இலங்கைப் பிரசையா ? :————.
   (ஆ) வம்சாவழி வந்தவரா ? :————.
   (இ) பதிவு செய்யப்பட்டவரா ? :————.
5. கல்வித் தகைமைகள் :————.
   (சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சையைக் குறிப்பிடுக)
6. அனுபவத் தகைமைகளின் விபரங்கள் :————.
   (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்)
7. அரசாங்கத் திணைக்களத்தில் சேவை புரிந்து விலகினவராயின் அதன விபரங்கள் :—
   (அ) சேர்ந்த, விலகிய திகதிகள் :————.
   (ஆ) பதவி :————.
   (இ) விலகியதற்கான காரணம் :————.
8. நீதிமன்றத்தால் குற்றவாளி எனக் கண்டு தண்டிக்கப்பட்டவராயின் அதன் விபரங்கள் :————.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :————.

9–983—26.9.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,873

---

### இலங்கைச் சுற்றுப் பயணச் சபை

பெந்தோட்டை தேசிய விடுமுறை வாசத்தலத்து அதிகாரத்தாரின் கீழான பின்வரும் பதவிகளுக்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன.

வேலைகள் உதவியாளர்,
உதவிப் பாதுகாவற் காவலர்கள்,
சுருக்கெழுத்து எழுதுவினைஞர்.

**(அ) வேலைகள் உதவியாளர் :**

**சம்பளத் திட்டம்.**—சகல படிகளும் உட்பட மாதமொன்றுக்கு ரூபா 250—15 × 20—500.

**வயது.**—1.10.1969 இல் 25 முதல் 30 வரை.

**தகைமைகள்.**—அங்கீகாரம் பெற்றதோர் தாபனத்தின் கனிட்ட தொழினுட்ப உத்தியோகத்தர் சான்றிதழ் அல்லது பொறிமுறை, மின்முறை அல்லது சிவில்முறை எந்திர வியலில் "டிப்ளோமா"ச் சான்றிதழுடன் ஒரு அரசாங்கத் திணைக்களத்திலேனும், அரசாங்கக் கூட்டுத் தாபனத்திலேனும் அங்கீகாரம்பெற்ற கைத்தொழில் முயற்சியிலேனும் ஒரு தொழில் பயில்பவராகவோ அத்தகைய வேறு எதும் பதவியிலோ மூன்று ஆண்டுகளாவது இருந்த அனுபவம் ; அல்லது

இரு தடவைக்கு மேற்படாது க. பொ. த. சாதாரண தர பரீட்சையில் 6 சித்திகளும் அரசாங்க திணைக்களத்தில், அரசாங்க கூட்டுத் தாபனத்தில் அல்லது அங்கீகாரம் பெற்ற கைத்தொழில் முயற்சியில் "சிவில்" அமைப்புகள் "ஓவசியராக" 5 ஆண்டுகளுக்குக் குறையாத அனுபவமும். (பொறிமுறை, மின்முறை வேலையிலும் நிலத்தோற்றம் வரைவதிலும் அனுபவமுள்ளவர்கள் விரும்பப்படுவர். தெரிந்தெடுக்கப்படும் அபேட்சகரின் தகைமைகளுக்கும் அனுபவத்துக்கும் ஏற்ப சம்பளத் திட்டத்தின் தகுந்ததோர் படியில் அவர் வைக்கப்படுவார்).

**(ஆ) சுருக்கெழுத்து எழுதுவினைஞர் :**

**சம்பளத் திட்டம்.**—சகல படிகளும் உட்பட மாதமொன்றுக்கு ரூபா 230—10—480.

**வயது.**—1.10.1969 இல் 35 க்குள்.

**தகைமைகள்.**—(அ) இரு தடவைக்கு மேற்படாது க. பொ. த. சாதாரண தர பரீட்சையில் 3 க்கு குறையாத விசேட சித்திகளுட்பட 6 சித்திகள்.—விசேட சித்திகளில் 2 சிங்களத்திலும் எண்கணிதத்திலுமாயிருத்தல் வேண்டும் ; அத்துடன்.

(ஆ) ஆங்கிலச் சுருக்கெழுத்திலும் தட்டெழுத்திலும் தேர்ச்சியும் வேண்டும்.

சிங்களச் சுருக்கெழுத்து, தட்டெழுத்து தேர்ச்சியும் ஆங்கிலத்தில் விசேட சித்தியுமுள்ள அபேட்சகர்கள் விரும்பப்படுவர்.

**பொதுவானவை.**—வேலைகள் உதவியாளரதும் சுருக்கெழுத்து எழுதுவினைஞரதும் நியமனங்கள் மூன்றாண்டுகளுக்கு தகுதிகாண் நிலையிலிருக்கும்.

தெரிந்தெடுக்கப்படும் அபேட்சகர்கள்—

(1) பெந்தோட்டை தேசிய விடுமுறை வாசத்தலத்தில் வேலை செய்தல் வேண்டும். எனினும் நாட்டின் எப்பகுதிக்கும் அவர்கள் மாற்றப்படக் கூடும் ;

(2) 1966 இன் 33 ஆம் இலக்க அரச கரும மொழிச்சட்ட ஏற்பாடுகளுக்கு அமைதல் வேண்டும் ;

(3) பணியாளர் சகாய நிதிக்கு பணம் கொடுத்தல் வேண்டும்.

தகைமைகள், வயது முதலிய விபரங்களடங்கிய விண்ணப்பங்கள், 1969 , ஐப்பசி 14 ந் தேதியில் அல்லது அதற்கு முன்னர், கொழும்பு 3, காலி முக மத்திய வீதி, 25, இலங்கைச் சுற்றுப் பயணச் சபை, தலைவருக்குக் கிடைக்குமாறு பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்பட வேண்டும். எவ்வகையிலேனும் ஆதரவு நாடுதல் தகைமைக்குப் பங்கமுண்டுபண்ணும்.

தலைவர்,
இலங்கைச் சுற்றுப் பயணச் சபை.

25, காலிமுக மத்திய வீதி,
கொழும்பு 3,
1969 ம் ஆண்டு செத்தெம்பர் மீ 15 ந் உ.

9–993—26.9.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,873.

---

### மட்டக்களப்பு மாவட்டத்தில் கிரான் பிரிவுக்கு பிறப்பு இறப்பும், ஏருவூர் கோறளைப் பற்று பிரிவுக்கு விவாக (பொது) பதிவாளர் பதவி

கிரான் பிறப்பு, இறப்புப் பதிவுப் பிரிவிற்குள் நிரந்தரமாகக் குடியிருப்பவர்கள், அப்பிரிவில் சில காலம் வசிக்கின்றவர்கள் அல்லது பொது மக்களால் அங்கீகரிக்கப்படக் கூடியவர்கள் ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்ப முடிவு திகதியன்று இருபத்தொரு வயதிற்குக் குறையாத வர்களாயின் மேற்படி பதவிக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம். அரசாங்க சேவையில் கடமையாற்றுபவர்களைப் பொறுத்தளவில் இவ் வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித் தராதரங்களும், ஏனைய பிற தராதரங்கள், நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள் இந்த அலுவலகத்திலும், காரியாதிகாரியின் அலுவலகங்களிலும், கிராம சேவையாளர்களின் அலுவலகங்களிலும், உள்ளூராட்சிச் சபை அலுவலகங்களிலும், கிராம நீதிமன்றங்களிலும், தபால் நிலையங்களிலும், பொலிஸ் ஸ்தானம், சனசமூக நிலையங்களிலும், பிரசித்தமான வியாபார நிலையங்களிலும், கூட்டுறவு தாபன நிலையங்களிலும், இந்தப் பிரிவுக்குள் இருக்கும் பிரசித்த இடங்களிலும், காரியாலயங்களிலும் பார்வைக்கு வைத்திருக்கப்பட்டிருக்கின்ற அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய விண்ணப்பப் பத்திரங்களில் நிரப்புவதோடு 1969 ம் ஆண்டு ஒற்ரோபர் மாதம் 17 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக எனக்குக் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

டீ. நேசையா,
பெரும்பாகப் பதிவுகாரர்.

மட்டக்களப்பு,
பெரும்பகுதிப் பதிவுகாரர் அலுவலகம்,
1969 ம் ஆண்டு செத்தெம்பர் மீ 9 ந் உ.

9–914—26.9.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,873

## இலங்கைப் போக்குவரத்துச் சபை

### காலி ஸ்தானங்கள்

சபையின் பொறிமுறை எந்திரவியல், குடிசார் எந்திரவியல் பகுதிகளில் பின்வரும் பதவிகட்கான விண்ணப்பங்கள் இலங்கைப் பிரசைகளிடமிருந்து கோரப்படுகின்றன.

(அ) தகுதிகாண் நிலைப் பட்டதாரிப் பொறியியலாளர் பதவிகள்.
(ஆ) தகுதிகாண் நிலைப் பொறியியல் தொழில்பயில்வோர் பதவிகள்.

2. தகைமைகள் :

**(அ) தகுதிகாண்நிலைப் பட்டதாரிப் பொறியியலாளர் பதவிகள்—**

(i) **வயது :** 1.9.69 ஆம் திகதியன்று 21 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்டவராகவிருக்கவேண்டும் ;

(ii) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் பி. எஸ் சி. (பொறிமுறை/குடிசார் எந்திரவியல்) பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

இறுதியாக நடைபெற்ற பி. எஸ் சி. எந்திரவியல் பரீட்சையின் பெறுபேறுகளை எதிர்நோக்கியிருப்பவர்கள் விண்ணப்பம் செய்யலாம்.

**(ஆ) தகுதிகாண்நிலைப் பொறியியல் தொழில்பயில்வோர் பதவிகள்—**

(i) **வயது :** 1.9.1969 ஆம் திகதியன்று 20 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்டவராகவிருக்கவேண்டும் ;

(ii) இலங்கைத் தொழினுட்பக் கல்லூரியின் கனிட்ட தொழினுட்ப உத்தியோகத்தர் சான்றிதழை (பொறிமுறை/ குடிசார் எந்திரவியல்) அல்லது அதற்குச் சமமான சான்றிதழை உடையவராகவிருக்க வேண்டும்.

3. கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கேற்ப விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு, 1969 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 11 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக, கொழும்பு 5, நாராகேன்பிட்டி, கிருல வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் ஆளணி முகாமையாளருக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

ஆளணி முகாமையாளர்,
இலங்கைப் போக்குவரத்துச் சபை

200, கிருல வீதி,
நாராகேன்பிட்டி,
கொழும்பு 5,
1969 ம் ஆஃ செப்டெம்பர் மீ 14 ந உ.

## இலங்கைப் போக்குவரத்துச் சபை

### மாதிரிப் படிவம்

1. விண்ணப்பிக்கப்படும் பதவி : ————.
2. பரீட்சார்த்தியின் முழுப் பெயர் : ————.
3. தபால் முகவரி : ————.
4. பிறந்த திகதி : ————.
(பிறப்புச் சான்றிதழின் பிரதியொன்று (மூலப் பிரதியல்ல) இணைக்கப்பட வேண்டும்)
5. 1.9.1969 திகதியன்று சரியான வயது : ————.
6. நீர் இலங்கைப் பிரசையானது வம்சாவழியாகவா அல்லது பதிவு மூலமாகவா ? : ————.
7. விவாகமானவரா அல்லது விவாகமாகாதவரா ? : ————.
(விவாகம் செய்தவராயின் விவாகம் செய்த திகதியும் பிள்ளைகளின் தொகையும் அவர்களின் வயதும்)
8. உயர்நிலைப் பாடசாலைக் கல்வி : ————.
(படித்த பாடசாலைகள், சித்தியெய்திய பரீட்சைகள் ஆகியவற்றைத் திகதிகளுடன் தருக.)
9. உயர் கல்வி (படித்த நிலையங்கள், சித்தியெய்திய பரீட்சைகள்; உயர்தொழில் தகைமைகள் ஆகியவற்றைத் திகதிகளுடன் தருக. சான்றிதழ்களின் பிரதிகள் (மூலப் பிரதிகள் அல்ல) இணைக்கப்படவேண்டும்) : ————.
10. தொழினுட்பத் தகைமைகள் : ————.
(படித்த நிலையங்கள், சித்தியெய்திய பரீட்சைகள், உயர்தொழில் தகைமைகள் ஆகியவற்றைத் திகதிகளுடன் தருக. சான்றிதழ்களின் பிரதிகள் (மூலப் பிரதிகள் அல்ல) இணைக்கப்படவேண்டும்).
11. தொழில் : ————.
(பாடசாலை விட்டு விலகியபின் பார்த்த வேலைகளின் விபரம். அதாவது, பதவிப் பெயர், வேலைகொள்வோரின் பெயர், நியமனத் திகதி, விலகுவதற்கான காரணங்கள் ஆகியவற்றைக் குறிப்பிடுக)
12. அரசாங்க சேவையில் அல்லது உள்ளூராட்சி சேவையில் அல்லது வர்த்தக நிலையங்களில் நிறைவேற்று பதவிகளில் உயர் தொழில் பயிற்சி அல்லது அனுபவம். (வகித்த பதவிகள், வேலையின் தன்மை, எல்லாம் உட்பட்ட சம்பளம் ஆகியவற்றைத் திகதிகளுடன் குறிப்பிடுக) : ————.
13. விண்ணப்பிப்பதற்கு ஆதாரமான விசேட உரிமைகள் (இப்பதவிக்கு உங்கள் தகுதியை உயர்த்தக்கூடிய மேற்கூறிய எப்பதவியிலேனும் செய்த வேலையின் விவரங்களைச் சுருக்கமாகத் தருக) : ————.
14. சிங்களத்தில் எய்தியுள்ள ஆகக்கூடிய தராதரம் : ————.
15. இதற்கு முன்னர், இலங்கைப் போக்குவரத்துச்சபையில் ஏதாவது பதவிக்கு நீர் விண்ணப்பித்தீரா? விண்ணப்பித்திருப்பின் முடிவுகள் யாவை ? : ————.
16. வேறேதேனும் விபரங்கள் : ————.
17. சட்ட நீதிமன்றத்தில் கிறிமினல் குற்றங்கள் எதற்கேனும் குற்றவாளியாகக் காணப்பட்டீரா ? : ————.
அங்ஙனமாயின் விவரங்கள் தருக : ————.
18. விண்ணப்பதாரர் பற்றிய தகவல்கள் பெறக்கூடிய இருவரது பெயர்களும் விலாசங்களும் : ————.
(1) ————.
(2) ————.

இவ் விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவையெனவும், இதன்கண் தரப்பட்டுள்ள விடயங்கள் பிழையானவையாகவோ, சரியற்றவையாகவோ தெரிவதற்கு முன் காணப்பட்டால் தகுதியற்றவரென நீக்கப்படுவதற்கும், தெரிவிற்குப் பின் கண்டுபிடிக்கப்பட்டால் நட்டஈடு இன்றி உத்தியோகத்திலிருந்து விலக்கப்படுவதற்கும் இடமுண்டு என்பதையும் நான் நன்கறிவேனெனவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

————.
திகதி : ————. விண்ணப்பதாரரின் கையொப்பம்.

9-980—26.9.1969 ந் திகதிய வர்த்தமானி இல. 14,873

---

## இலங்கை அரச வான்படை (பொதுக் கடமைக் கிளை)யில் பயில் இளவல் நிலைகள் (வலவர்கள்) திருத்தம்

1969 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 29 ந் திகதி இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை நிர். 14,869 யின் 13 (இ), 14 ஆகிய இரண்டு பந்திகளும் பின்வருமாறு திருத்தி அமைக்கப்பட்டுள்ளன :—

பந்தி 13 (இ) **கல்வி :**—கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சையில் (சாதாரண தரம்) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஆங்கிலம், சிங்களம்/தமிழ், பௌதிகவியல், இரசாயனவியல், கணிதம் ஆகிய பாடங்களை உள்ளடக்கி ஆறு பாடங்களில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும். ஆனால் பாடங்களில் திறமைச் சித்தியடைந்துள்ளவர்களுக்கு அல்லது உயர் கல்வித் தகைமையுடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். (அபேட்சகர் இறுதித் தெரிவுக்கு முன்னர் உத்தியோகத்தர் தா, நுண்ணறிவுப் பரீட்சைகளுக்கு உட்படுமாறு வேண்டப்படுவர்).

பந்தி 14.—வலவர்கள் பயிற்சிக்கான விண்ணப்பங்கள் இந்த அறிவித்தலின் அட்டவணை "அ" வில் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தின் பிரதி யொன்றில் எழுதப்பட்டு "வான்படை எவுநர், அஞ்சற் பெட்டி 594, கொழும்பு" என்ற முகவரிக்கு 9.10.69 தேதி மத்தியானம் 12 மணிக்கு பிற்படாமல் சென்றடையுமாறு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படும் கடித உறையில் "விண்ணப்பம்—(வலவர்) பயில இளவல் நிலைகள்" என்று குறிப்பிடப்பட வேண்டும்.

இ. ஆர். அமரசேகர,
எயர்வைஸ் மாஷல, வானபடை எவுநர்.

வான்படைத் தலைமைக் காரியாலயம்,
த. பெ. 594, கொழும்பு,
1969 ம் ஆஃ செத்தெம்பர் மீ 20 ந உ.

9-1028—26.9.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,873

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

பொதுமக்கள் தொடர்பு சேமநல அதிகாரிப் பதவிக்கான விண்ணப்பங்கள்—இலங்கையரிடமிருந்து கோரப்படுகின்றன.

**தகைமைகள் :**

(அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டம் அல்லது டிப்ளோமாவுடன் ஆகக் குறைந்தது மூன்றுவருடப் பத்திரிகை அனுபவம் அல்லது பொதுமக்கள் தொடர்பு வேலை அனுபவம் இருத்தல் வேண்டும்,
அல்லது,
சிரேஷ்ட பாடசாலைப் பத்திரம் அல்லது அதற்கு இணையான தராதரப் பத்திரத்துடன் 10 வருட காலத்திற்குக் குறையாத அனுபவம் பத்திரிகையிலோ அல்லது பொதுமக்கள் தொடர்பு வேலையிலோ இருத்தல் வேண்டும்.

(ஆ) ஆங்கிலத்திலும், சிங்களத்திலும் தெளிவான அறிவு கட்டாயம் இருத்தல் வேண்டும்.

**வயது :** 30 முதல் 45 வரை.

**சம்பள விகிதம் :** ரூபா 625—900 (5 × 25—5 × 30). எல்லாம் உட்பட.

இதன் கீழ்க் காணப்படும் மாதிரிப் படிவத்தில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு " மா அதிகாரி, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், கொழும்பு 7" என்று முகவரியிடப்பட்டு 1969 அக்டோபர் மாதம் 7 ந் திகதிக்குப் பிந்தாமல அவருக்குக் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். தபாலுறையின் இடதுபுற மேல் மூலையில் " பொது மக்கள் தொடர்பு சேமநல அதிகாரி " என்று குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

என். டி. ஜெயவீர,
மா அதிகாரி.

1969 ம் ஆண்டு செப்டம்பர் மீ 14 ந் வ.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

**இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்**

**பொதுமக்கள் தொடர்பு—சேமநல அதிகாரி பதவிக்கான விண்ணப்பம்**

1. முழுப்பெயர் : ————.
   (1) முன்னெழுத்துடன் பெயர் : ————.
   (திரு, திருமதி, செல்வி என்பதைக் குறிப்பிடுக).
   (2) விலாசம் : ————.
2. பிறந்த இடமும் திகதியும் : ————.
   7.10.1969 அன்று வயது : ————.
   (பிறப்புச்சாட்சிப் பத்திரத்தின் பி. தி இணைக்கப்பட வேண்டும்)
3. நாட்டினம் : ————.
4. கல்வியும் பயிற்சியும் : .

| படித்த பாடசாலைகள் அல்லது கல்வி நிலையங்கள் | திகதியில் இருந்து வரை | சித்தியடைந்த பரீட்சைகள் | வகித்த பொறுப்பான பதவி களும், செயல்முறைகளும் |
|---|---|---|---|
| | | | |

5. சித்தியடைந்த உயர்தர பரீட்சை :
   1. சிங்களம் : ————.
   2. தமிழ் : ————.
   3. ஆங்கிலம் : ————.
   (தராதரப்பத்திரங்களின் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்)
6. அனுபவம் : முன்னைய தொழில் அனுபவமும், வகித்த பதவிகளின் விபரமும்—(வரிசைக்கிரமமாக) :

| நிறுவனத்தின் பெயர் | பதவி | திகதிகள் | | பதவியை விட்டு விலகிய காரணம் |
|---|---|---|---|---|
| | | இருந்து | வரை | |
| | | | | |

7. உமது பிரத்தியேக வாழ்வில் உம்முடன் நெருங்கி தொடர்புகொண்ட (ஆனால் உறவினரால் அல்லாத) மூன்று மத்தியஸ்தர்களின் பெயர்கள்—விசாலங்கள்—அந்தஸது :
   (1) ————.
   (2) ————.
   (3) ————.
8. விண்ணப்பத்துடன் இணைத்துள்ள நற்சாட்சிப் பத்திரங்களை வழங்கியவர்களின் பெயர்களும் பதவிகளும் :
   (1) ————.
   (2) ————.
   (3) ————.
9. வேறு ஏதாவது விபரங்கள் :
   (1) ————.
   (2) ————.
   (3) ————.
10. இவ்விண்ணப்பத்தில் என்னுற் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் இத்தால் உறுதிப் படுத்துகிறேன். இதன்கண் உள்ள ஏதேனும் விபரங்கள் தவறானவை அல்லது சரியானவை அல்ல என்று தெரிவுக்கு முன்னர் காணப்பட்டால், எனது விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்படும் என்பதையும் தெரிவு செய்யப்பட்ட பின்னர் காணப்பட்டால் எவ்வித நஷ்டஈடும் எனக்கு வழங்கப்படாமல் வேலை நீக்கஞ் செய்யப்படுவதற்கு உரியவனுவேன் என்பதை அறிந்துள்ளேன்.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி.————

9-952—26.9.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,873

## மதுவரித் திணைக்களம்

### பீப்பா செய்வோர் பதவிகள்—III ஆம் வகுப்பு

மதுவரித் திணைக்களத்தில் III ஆம் வகுப்பு பீப்பா செய்வோர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் இதன் கீழ் காணப்படும் மாதிரிப் பத்திரத்தில் 1969 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 15 ம் தேதி அல்லது அதற்கு முன்னதாக மதுவரி ஆணையாளர், மதுவரி ஆணையாளர் திணைக்களம், டொறிங்டன் சதுக்கம், கொழும்பு 7 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

**2. சம்பள விகிதம்.**—(அ) கொழும்பில் அல்லது பொறியியல் தொழிற்சாலை ஸ்தாபனமாக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் வேலை செய்வோருக்கு,

முதல் 6 மாதங்களுக்கு நாளொன்றுக்கு ரூபா 1.80 சதமும், அதன் பின்னர் ஒரு வருடத்திற்கு ரூபா 540—30 × 8—24 × 1—804.

(ஆ) வெளியூர்களில் அல்லது பொறியியல் தொழிற்சாலை ஸ்தாபனமாக அங்கீகரிக்கப்படாத நிறுவனங்களில் வேலை செய்வோருக்கு,

முதல் 6 மாதங்களுக்கு நாளொன்றுக்கு ரூபா 1.60 சதமும், அதன் பின்னர் ஒரு வருடத்திற்கு ரூபா 504—30 × 8—744.

**3. வயதுக் கட்டுப்பாடு.**—15.10.69 ல் 20 வயதுக்குக் குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். (இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அரசாங்க சேவையில் ஏற்கனவே உள்ளவர்களுக்கு அமையாது).

**4. கல்வியும் மற்றும் தகைமைகளும்.**—(அ) (i) விண்ணப்பதாரர் 6 ஆம் வகுப்பு சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.

(ii) அளவுகோலில் $\frac{1}{16}$ அங்குலம் அளவுவரை வாசிக்கக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

(iii) பீப்பா செய்தலைப் பற்றி பொதுவாகத் தெரிந்திருத்தல் வேண்டும்.

(iv) வளயங்கள் துளையிடுதலிலும், வளயம் பொருத்துதலிலும் அறிவு இருத்தல் வேண்டும்.

(v) தச்சு வேலை பற்றியும் பீப்பா செய்வதிலும் பொதுவாகப் பாவிக்கப்படும் மரங்கள் பற்றியும் தெரிந்திருத்தல் வேண்டும்.

(ஆ) மேலே (4) (அ) பிரிவில் 1 தொடக்கம் 5 வரையுள்ள தகைமைகளுக்கு மேலதிகமாக விண்ணப்பதாரர்கள் பின்வரும் சேவைத் தகைமைகளில் ஒன்று உடையவராக இருத்தல் வேண்டும் :

(i) IV/V ஆம் வகுப்புகளில் அல்லது வகுப்பில் குறைந்தது ஐந்து வருடம் சேவை செய்திருத்தல் வேண்டும்.

அல்லது

(ii) அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனத்தில் III ஆம் வகுப்பு பீப்பா செய்பவராக இருத்தல் (தகைமைச் சான்றிதழ்களால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்) IV ஆம் அல்லது V ஆம் வகுப்பு பீப்பா செய்வோராகக் குறைந்தது 3 வருட சேவையுடையவராக இருத்தல் வேண்டும்.

அல்லது

(iii) அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனத்தில் III ஆம் வகுப்பில் பீப்பா செய்பவராக 3 வருட சேவையுடையவராக இருத்தல் வேண்டும் (தகைமைச் சான்றிதழ்களால் உறுதிப்படுத்துதல் வேண்டும்).

(இ) நல்லொழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும். (பொறுப்பு வாய்ந்தவர்களால் வழங்கப்பட்ட நற்சான்றுப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்).

**5. சேவை நிபந்தனைகள் :**— பதவிகள் நிரந்தரமானது. நியமனம் பெற்றவர் மாதச்சம்பளத்தில் அமர்த்தப்படும்பொழுது அவருடைய இளைப்பாற்றுச் சம்பளம் பெறும் தகைமைகள் 7.2.64ம் திகதியிடப்பட்ட திறைசேரி சுற்றுநிருபம் இல : 633 ல் உள்ள விதிகளுக்குக் கட்டுப்பட்டதாகும் (இளைப்பாற்றுச் சம்பளத்திற்கு உரிமையுடையவராகும்வரை அரசாங்க சேவ்வமாற்றுதவி சகாய நிதிக்கு உதவு தொகை செலுத்த வேண்டும்).

6. பின்வரும் பிரதிகள் (மூலப் பிரதி அல்ல) விண்ணப்பப் பத்திரத்துடன் அனுப்பப்படல் வேண்டும்.

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (**குறிப்பு :** சமயதீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ்கள் ஏற்கப்படமாட்டாது).

(ஆ) உயர் கல்விக்காய தராதரப்பத்திரம்.

(இ) குணச் சான்றிதழ்.

(ஈ) அறிவித்தலின் 4 ஆ (i), (ii), (iii) ஆம் பந்திகளில் கூறப்பட்ட சேவைத்தகைமையின சான்றிதழ்.

(உ) கடந்தகால சேவை அனுபவச் சான்றிதழ்.

7. இந்த வர்த்தமானியின் I ஆம் பகுதி (II) ஆம் பிரிவில் வெளியாகியிருக்கும் அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைப் பார்க்கவும்.

8. விண்ணப்பங்கள் இத் திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காவது தனிப்பட்ட முகவரிக்கு அனுப்பக்கூடாது.

கே. ஏ. டி. சந்திரசேகர,
மதுவரி ஆணையாளருக்காக.

மதுவரி ஆணையாளர் திணைக்களம்.
டொறிங்டன் சதுக்கம்,
கொழும்பு 7.

### விண்ணப்பப் பத்திரம்

**பீப்பா செய்வோர் பதவி III ஆம் வகுப்பு :**

1. முழுப் பெயர் :———.
2. விலாசம் :———.
3. (i) பிறந்த திகதி :———.
   (ii) 15.10.69ல் வயது : வருடம் : ——— மாதம் :———
4. சித்தியடைந்துள்ள உயர்பரீட்சை :———.
5. விளம்பரத்தின் 4 (அ) ஆம் பந்தியில் கூறப்பட்ட விபரங்கள் :———
6. விளம்பரத்தின் 4 (ஆ) ஆம் பந்தியில் கூறப்பட்ட விபரங்கள் :
   (அரசாங்கத்தின் கீழும், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிலும் சேவை செய்த காலங்களைத் தனித்தனியே தருக)
   திணைக்களத்தின் / நிறுவனத்தின் பெயர்———.
   வகுப்பு / தரம் :———. நியமனத் திகதி :———.
   சேவையின் காலம் :———.
7. நற்சான்றிதழ்கள் கொடுத்தவர்களின் பெயர்கள் :
   (i) ———
   (ii) ———
8. வேறு விசேட தகைமைகளின் விபரங்கள் (உ-ம்- இவ்வித பதவியில் உள்ள அனுபவங்கள்)

இவ்விண்ணப்பத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் உண்மையானவை யென்றும் சரியானவை யென்றும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவையெனக் காணப்படின் தெரிவு செய்வதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும், நியமனத்திற்குப் பின்னராயின் நட்டஈடின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்,

———,
விண்ணப்பத்தாரரின் ஒப்பம்.

திகதி :———

9—850—26.9.69 ம் திகதிய வர்த்தமானி இல. 14,873

---

## பல்கலைக் கழகங்களில் கலைமானி விஞ்ஞானி (பொது) கலைமுதுமானி (கல்வி) வகுப்புக்களை மேற்கொள்ளுதற்கும் இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியில் வர்த்தகத் துறை டிப்ளோமா வகுப்பு மேற்கொள்தற்கும் ஆசிரியர்களுக்குப் படிப்பு லீவு—1969 ஆம் ஆண்டு

1969 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 12 ஆந் திகதி வெளியான 14,871 ஆம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் I ஆம் பகுதி II ஆம் பிரிவில் பிரசுரிக்கப்பட்டுள்ள அறிக்கையைக் கவனிக்கவும்.

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முடிவுத் திகதி 1969 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 30 ஆந் திகதிவரை பிற்போடப்பட்டுள்ளது என்பதனை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

நிரந்தரக் காரியதரிசிக்காகவும்
மகா வித்தியாதிபதிக்காக.

9—1003—26.9.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,873

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## கடற்றொழில் திணைக்களம்

### கடற்றொழில் பயிற்சி நிலையம், நீர்கொழும்பு
### தமிழ் மொழி மூலம் கடற்றொழிலாளர் பயிற்சி வகுப்புகள்

1970 ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் தமிழ் மொழியில் தொடங்கவிருக்கும் கடற்றொழிலாளர் பயிற்சி வகுப்புக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள் இதன் கீழ் வழங்கியுள்ள மாதிரிப் படிவ அமைவில், 1969 ம் ஆண்டு நவம்பர் மாதம் 15 ந் தேதி அல்லது அதற்கு முன்னர் நீர்கொழும்பு, புனித செபஸ்தியான் ஒழுங்கையிலுள்ள கடற்றொழில் பயிற்சி நிலைய அதிபருக்குக் கிடைக்க வேண்டும்.

2. **பயிற்சிக் காலமும், விரிவும் :** இப்பயிற்சி வகுப்புகள், மீன்பிடிக் கருவி, மீன்பிடி முறைகள், இயந்திரத்தைச் செயலாற்றுதல், பேணுதல், என்பனவற்றையிட்ட பயிற்சியை அடக்கும். இப்பயிற்சி வகுப்புகள் கிட்டத்தட்ட ஆறு மாத காலங்களுக்கு நீடிக்கும். ஒவ்வொரு வகுப்பிலும் 15 பேருக்கு இடமளிக்கப்படும்.

3. **பயிற்சி நிபந்தனைகள்**

(1) பயிற்சிக் காலத்தில் பயிற்சி பெறுவோர் நிலையத்திலேயே வசிக்க வேண்டும் ;

(2) இலவச இடவசதி அளிக்கப்படும். பயிற்சி பெறுவோர் தங்கள் படுக்கைகளைக் கொண்டு வரவேண்டும் ;

(3) பயிற்சி முடிந்ததும், பயிற்சி பெற்றவர் அரசாங்கத்தின் கீழ் தொழில் எதுக்கேனும் எதுவித உரிமையையும் கோர முடியாதவராவர் ;

(4) பயிற்சி வகுப்புகளின் கால எல்லைவரையும், பயிற்சி பெறுவோர் நிலைய விதிகளுக்கு அமைந்து நடக்க வேண்டியவர்களாவர் ;

(5) பயிற்சியாளர்களிடமிருந்து பயிற்சிக்குக் கட்டணமேதும் அறவிடப்படமாட்டாது ;

(6) 1970 ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஆரம்பமாகும் பயிற்சியின் போதனாமொழி தமிழாயிருக்கும் ;

(7) நிலையத்துக்குரிய பயிற்சி வள்ளங்களில் கடலில் செயல்முறையிற் செய்து காட்டுவதையும் பயிற்சியடக்கும் ;

(8) பயிற்சி பெறுவோருக்கு நாளொன்றுக்கு ரூபா 2.00 வீதம் உணவுப்படி வழங்கப்படும்.

4. **தேவையான தராதரங்கள் :** இப்பயிற்சிக்கான விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும்—

(அ) 1969 ம் ஆண்டு நவம்பர் மாதம் 15 ந் தேதியன்று 18 வயதிற்குக் குறையாதவராயும், 30 வயதிற்கு மேற்படாதவராயும் ;

(ஆ) நல்லொழுக்கமும், நல்ல உடற்றிறன் உடையவராகவும் ;

(இ) தமிழில் கனிஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சை வரையும் படித்தவராயும் இருக்க வேண்டும்.

**குறிப்பு :**—ஜீவனோபாய தொழிலாக மீன்பிடியைக் கொண்டோரும், அவர்களின் ஆண் மக்களுமான அபேட்சகருக்கு முதன்மை அளிக்கப்படும்.

5. விண்ணப்பதாரர், பின்வருவனவற்றின் பிரதிகளை (மூலச் சான்றிதழ்களை அல்ல) தங்கள் விண்ணப்பங்களுடன் இணைக்க வேண்டும் :—

(அ) பிறப்பு பதிவுச் சான்றிதழ் ;

(ஆ) தாம் பெற்ற ஆகக்கூடிய கல்வித் தராதரப் பத்திரம் ;

(இ) இரு நற்சாட்சிப் பத்திரங்கள் ;

(ஈ) விண்ணப்பதாரரினதும் அன்னார் தந்தையினதும் தொழிலைக் குறித்து, கிராம சேவகரிடமிருந்து ஒரு அத்தாட்சிப் பத்திரம் ஒன்று.

6. அபேட்சகர் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட இடத்தில் நேர்முகப் பரீட்சையொன்றுக்குப் பிரசன்னமாகத் தயாராயிருக்க வேண்டும். இது சம்பந்தமாக பிரயாணச் செலவோ அல்லது வேறு செலவுகள் எதுவுமோ வழங்கப்படமாட்டாது.

7. இவ்வகுப்புகளில் சேர்வதற்கு தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்களுக்கு வகுப்புகள் ஆரம்பிக்கும் திகதி அறிவிக்கப்படும்.

8. விண்ணப்பங்களும் அல்லது அத்தோடு சம்பந்தப்பட்ட வேறெந்த கடிதப் போக்குவரத்துக்களோ இப்பகுதியிலுள்ள எந்த உத்தியோகத்தருக்கும் சொந்தமான முறையிலல்லாது, நீர்கொழும்பு, புனித செபஸ்தியான் ஒழுங்கையில் அமைந்துள்ள கடற்றொழில் பயிற்சி நிலைய அதிபருக்கு முகவரியிட்டு அனுப்பப்படல் வேண்டும்.

ஐ. ஒ. கே. ஜீ. பர்னாந்து,
கடற்றொழில் இயக்குநர்.

கடற்றொழில் திணைக்களம்,
கொழும்பு 3,
1969 ம் ஆண்டு செப்தெம்பர் மீ 12 ந் உ.

**கடற்றொழிலாளர் பயிற்சி வகுப்புக்கான விண்ணப்பப் படிவம்**

1. முழுப்பெயர் : ————.
   (அ) முதற் பெயர் : ————.
   (ஆ) ஏனைய பெயர்கள் : ————.
2. தபால் முகவரி : ————.
3. (அ) 1969 ம் ஆண்டு நவம்பர் மாதம் 15 ந் திகதியில் சரியான வயது :
   வருடங்கள் :————. மாதங்கள் :————. தினங்கள் :————
   (ஆ) பிறந்த திகதி : ————.
4. நாட்டினம் : ————.
5. விண்ணப்பதாரரின் தற்போதை தொழில் : ————.
6. விண்ணப்பதாரர் தொழில் செய்யுமிடம் : ————.
7. விண்ணப்பதாரர் மீனவராயிருந்தால் :
   (அ) மீன்பிடி ரகம் : ————.
   (ஆ) படகு/ம் அல்லது கருவியும் சொந்தக்காரனா : ————.?
   (இ) ஒரு இயந்திர வள்ளத்தின் சொந்தக்காரனா ? ————.
8. விண்ணப்பதாரரின் தந்தையின் தற்போதைய தொழில் : ————
9. விண்ணப்பதாரரின் தந்தை தொழில் செய்யுமிடம் : ————.
10. விண்ணப்பதாரர் விவாகமானவரா, விவாகமாகாதவரா, அல்லது தாரமிழந்தவரா ? : ————.
    (விவாகமானவராயின் பிள்ளைகளின் தொகையைத் தருக)
11. கல்வித் தராதரம் : ————.
12. ஏற்கனவே பெற்றுள்ள பயிற்சி ஏதாவதினும் விபரங்கள் :————:
13. இப்பயிற்சிக்கு உரிமை கோரும் விசேட காரணங்களின் விபரங்கள் ————.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி : ————.

9-832—26.9.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,873.

---

## கடற்றொழில் திணைக்களம்

### கடற்றொழில் பயிற்சி நிலையம், நீர்கொழும்பு
### தமிழ் மொழி மூலம் பழுதுபார்க்கும் இயந்திரத் தொழிலாளர் (மெக்கானிக்) பயிற்சி வகுப்புகள்

1970 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் தமிழ் மொழியில் தொடங்கவிருக்கும் பழுதுபார்க்கும் இயந்திரத் தொழிலாளர் (மெக்கானிக்) பயிற்சி வகுப்புகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள், இதன்கீழ் வழங்கியுள்ள மாதிரிப் படிவ அமைவில், 1969ம் ஆண்டு நவம்பர் மாதம் 15 ந் தேதி அல்லது அதற்கு முன்னர் நீர்கொழும்பு, புனித செபஸ்தியான் ஒழுங்கையிலுள்ள கடற்றொழிற் பயிற்சி நிலைய அதிபருக்குக் கிடைக்க வேண்டும்.

2. **பயிற்சிக் காலமும், விரிவும் :** பயிற்சி வகுப்பு கடலக இயந்திரங்களின் கோட்பாடு, தத்துவம், செயலாற்றுதல், பராமரித்தல், சுத்தி செய்தல் என்பனவற்றைப் பொறுத்ததாகும். இப்பயிற்சி வகுப்பு ஏறக்குறைய 6 மாதகாலம் நடைபெறும். ஒவ்வொரு வகுப்பிலும் 10 பேருக்கு இடமளிக்கப்படும்.

3. **பயிற்சி நிபந்தனைகள் :**

(1) பயிற்சிக் காலத்தில் பயிற்சி பெறுவோர் நிலையத்திலேயே வசிக்க வேண்டும்.

(2) இலவச இடவசதி அளிக்கப்படும். பயிற்சி பெறுவோர் தங்கள் படுக்கைகளைக் கொண்டு வரவேண்டும் ;

(3) பயிற்சி முடிந்ததும், பயிற்சி பெற்றவர் அரசாங்கத்தின் கீழ் தொழில் எதுக்கேனும் எதுவித உரிமையையும் கோர முடியாத வராவர் ;

(4) பயிற்சி வகுப்புகளின் கால எல்லைவரையும், பயிற்சி பெறுவோர் நிலைய விதிகளுக்கு அமைந்து நடக்க வேண்டியவர்களாவர்.

(5) பயிற்சியாளர்களிடமிருந்து பயிற்சிக்குக் கட்டணமேதும் அறவிடப் படமாட்டாது.

(6) 1970ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஆரம்பமாகும் பயிற்சிகளின் போதனு மொழி தமிழாயிருக்கும்.

(7) பயிற்சி பெறுவோருக்கு நாள் ஒன்றுக்கு ரூபா 2/- வீதம் உதவுப்படி வழங்கப்படும்.

4. **தேவையான தராதரங்கள்.**— இந்தப் பயிற்சி வகுப்புக்ளுக்கான விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் பின்வரும் நிபந்தனைகளைத் திருப்தி கரமாக நிரூபிக்க வேண்டும் :—

(அ) 1969ம் ஆண்டு நவம்பர் மாதம் 15ந் தேதியன்று 18 வயதிற்குக் குறையாதவராயும் 35 வயதிற்கு மேற்படாதவராயும் ;

(ஆ) நல்லொழுக்கமும் , நல்ல உடற்றிறன் உடையவராகவும் ;

(இ) ஒரு ஊர்திச் சாலையில் அல்லது ஒரு வேலைக்களத்தில் மூன்று ஆண்டுகள் செய்முறைப் பொறித்துறை அனுப்பவமும் ;

(ஈ) சிரேஷ்ட கல்வித் தராதரப் பத்திரம் (எஸ். எஸ். சீ.) அல்லது கல்விப் பொதுத் தராதரப் பத்திர (ஜீ. சீ. ஈ.) த்தில் கணிதம் உட்பட 4 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேணடும்.

5. விண்ணப்பதாரர் பின்வருவனவற்றின் பிரதிகளை (மூலச் சான்றிதழ்களை அல்ல) தங்கள் விண்ணப்பங்களுடன் இணைக்க வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் ;

(ஆ) தாம் பெற்ற கல்வித் தராதிப் பத்திரம் ;

(இ) இரு நற்சாட்சிப் பத்திரங்கள் ;

(ஈ) விண்ணப்பதாரரினதும் அன்னுர் தந்தையினதும் தொழிலைக் குறித்து, கிராம சேவகரிடமிருந்து ஒரு அத்தாட்சிப் பத்திரம் ;

(உ) விண்ணப்பதாரர் இயந்திரப் பயிற்சி (மெக்கானிக்) பெற்றதற்குரிய அத்தாட்சிப் பத்திரம் ஒன்று.

6. அபேட்சகர் ஒரு குறிப்பிட்ட நேரத்தில், குறிப்பிட்ட இடத்தில் நேர்முகப் பரீட்சையொன்றுக்குப் பிரசன்னமாகத் தயாராயிருக்க வேண்டும். இது சம்பந்தமாக பிரயாணச் செலவோ அல்லது வேறு செலவுகள் எதுவுமோ வழங்கப்படமாட்டாது.

7. இவ்வகுப்புகளில் சேர்வதற்கு தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் களுக்கு வகுப்புகள் ஆரம்பிக்கும் திகதி அறிவிக்கப்படும்.

8. விண்ணப்பங்களும் அல்லது அத்தோடு சம்பந்தப்பட்ட வேறேந்த கடிதப் போக்குவரத்துக்களோ இப்பகுதியிலுள்ள எந்த உத்தியோகத்தருக்கும் சொந்தமான முறையில்லாது, நீர்கொழும்பு, புனித செபஸ்தியான் ஒழுங்கையில் அமைந்துள்ள கடற்றொழிற் பயிற்சி நிலைய அதிபருக்கு முகவரியிட்டு அனுப்பப்படல் வேண்டும்.

ஐ. ஒ. கே. ஜீ. பர்ணுந்து,
கடற்றொழில் இயக்குநர்.

கடற்றொழில் திணைக்களம்,
கொழும்பு 3, செத்தெம்பர் 12 ,1969.

**பழுதுபார்க்கும் இயந்திரத் தொழிலாளர் (மெக்கானிக்)**
**பயிற்சி வகுப்புகளுக்கான விண்ணப்பப் படிவம்**

1. முழுப்பெயர் :————.
   (அ) முதற்பெயர் :————.
   (ஆ) ஏனைய பெயர்கள் :————.
2. தபால் முகவரி :————.
3. (அ) 1969 ம் ஆண்டு நவம்பர் மாதம் 15ந் திகதியில் சரியான வயது:—
   வருடங்கள் :————. மாதங்கள் :————. தினங்கள் :————
   (ஆ) பிறந்த திகதி :————.
4. நாட்டினம் :————.
5. விண்ணப்பதாரரின் தற்போதய தொழில் :————.
6. விண்ணப்பதாரர் தொழில் செய்யுமிடம். :————.
7. விண்ணப்பதாரர் விவாகமானவரா, விவாகமாகாதவரா அல்லது தாரமிழந்தவரா ?
   (விவாகமானவராயின் பிள்ளைகளின் தொகையைத் தருக)
8. கல்வித் தராதரம் :————.
9. விண்ணப்பதாரர் பெற்றுள்ள இயந்திரத் தொழிற் பயிற்சியின் விபரங்கள் :————.
10. பயிற்சிக்கு உரிமை கோரும் விசேட காரணங்களின் விபரங்கள் :————

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :————.

9/821—26.9.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,873

---

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## நீர்ப்பாசனத் திணைக்களம்

குருநாகல் தொகுதி ஹக்வட்டுன ஓயாத் திட்டத்தில் தளபாடச் சாமான்கள் பரிவர்த்தனை செய்வதற்கு கேள்விப்பத்திரங்கள் 1969 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் இருபத்தி ஓராம் திகதி காலை 10 மணி வரைக்கும் வடமேல் பெரும்பாக நீர்ப்பாசன பொறியியலாளரால் ஏற்றுக் கொள்ளப்படும்.

நீர்ப்பாசன இலாகாவில் ரூபா 15,000 அல்லது மேற்பட்ட தொகைக்கு பதிவு செயயப்பட்ட ஒப்பந்தக்காரர், கூட்டுறவுச் சமாசங்கள், சமூக சேவா சங்கங்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம். ஹக்வட்டுன ஓயா / நிக்கவெரட்டியா / குருநாகல் நீர்ப்பாசன பொறியியலாளர் காரியாலயத்தில் பெறக்கூடிய நகல்களில் கேள்விப் பத்திர இருபிரதிகள் கொடுக்கப்படவேண்டும். கொழும்பு தவிர்ந்த ஏனைய கச்சேரிகளிலோ, நீர்ப்பாசன அதிபர் காரியாலயத்திலோ அன்றி ஹக்வட்டுன ஓயா/ நிக்கவெரட்டியர் / குருநாகல் பொறியியலாளர் காரியாலயத்திலோ ரூபா 25 கட்டுப் பணமாகக் கட்டிப் பெற்ற பற்றுச்சீட்டைக் கொடுத்து கேள்விப் பத்திர நகல்கள் 1969 ஆம் ஆண்டு ஒக்றேபர் மாதம் 17 ம் திகதி மாலை 1 மணி வரைக்கும் பெற்றுக்கொள்ளலாம்.

குருநாகல் வடமேல் பெரும்பாக நீர்ப்பாசன பொறியியலாளரின் காரியாலயத்தில் மேற்படி பெரும்பாக பொறியியலாளரால் கேள்விப் பத்திரங்கள் 1969 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 21 ந் திகதி காலை 10 மணிக்கு திறக்கப்பட்டு கேள்விப் பத்திரக்காரர் அனுமதிக்கப்படுவர்.

மேலதிக விளம்பரங்கள் ஹக்வட்டுன ஓயாத்திட்ட பொறியியலாளரின் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

செ. அப்பாத்துரை,
உப—பிரிவு ஆபீசர்,
ஹக்வட்டுன ஓயாத் திட்டம்.

மக்குல் பொத்த,
1969 ம் ஆண்டு செப்ரெம்பர் மீ 13 ந வ.

9–851—26.9.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,873

---

## ஆற்றுப்பள்ளத்தாக்குகள் அபிவிருத்திச் சபை

ஆற்றுப்பள்ளத்தாக்குகள் அபிவிருத்திச்சபைக்குத் தேவையான இலேகிணி முதலியவை விநியோகிப்பதற்கான மெழுகு முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. மேற்படி கேள்விப்பத்திரங்கள் கேள்விப்பத்திரச்சபை அதிபர், ஆற்றுப்பள்ளத்தாக்குகள் அபிவிருத்திச் சபை, அம்பாரை, என்று விலாசமிட்டு 1969 ம் ஆண்டு ஒற்றேபர் மாதம் 23 ம் திகதி பிற்பகல் 2.15 மணிக்கு முன்பு கிடைக்கக்கூடியதாக அனுப்பப் படல் வேண்டும்.

இக்கேள்விப்பத்திரங்கள் மேலேகுறிக்கப்பட்ட நேரத்தில் திறக்கப் படும்பொழுது விநியோகஸ்தரோ அல்லது அவரது பிரதிநிதியோ பிரசன்னமாய் இருக்கலாம்.

கேள்விப்பத்திரங்களும், அதன்பிரமாணங்களும் கீழ் கையொப்பம் இட்டிருப்பவரிடமிருந்தும், விநியோக உத்தியோகஸ்தர் (கல்ஓயா) ஆற்றுப்பள்ளத்தாக்குகள் அபிவிருத்திச்சபையிடமிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

அதிபர்,
மத்திய கேள்விச் சபை,
ஆற்றுப்பள்ளத்தாக்குகள் அபிவிருத்திச்சபை.

415, பௌத்தாலோக மாவத்தை,
கொழும்பு 7.

9—855/1—26.9.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,873

## ஆற்றுப்பள்ளத்தாக்குகள் அபிவிருத்திச் சபை

“ ஆற்றுப்பள்ளத்தாக்குகள் அபிவிருத்திச்சபைக்குத் தேவையான ” அச்சிட்ட படிவங்கள் விநியோகிப்பதற்கான மெழுகு முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. மேற்படி கேள்விப்பத்திரங்கள் கேள்விப்பத்திரச்சபை—அதிபர், “ ஆற்றுப்பள்ளத்தாக்குகள் அபிவிருத்திச்சபை ” அம்பாறை, என்று விலாசமிடப்பட்டு 1969 ம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 23 ம் திகதி பிற்பகல் 2.15 மணிக்கு முன்பு கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

இக்கேள்விப் பத்திரங்கள் மேலே குறிக்கப்பட்ட நேரத்தில் திறக்கப்படும்பொழுது வினியோகஸ்தரோ அல்லது அவரது பிரதிநிதியோ பிரசன்னமாய் இருக்கலாம்.

கேள்விப்பத்திரங்களும் அதன் பிரமாணங்களும் கீழ் கையொப்பம் இட்டிருப்பவரிடமிருந்தும், வினியோக உத்தியோகஸ்தர் (கல்ஓயா), ஆற்றுப்பள்ளத்தாக்குகள் அபிவிருத்திச்சபையிடமிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

அதிபர்,
மத்திய கேள்விச்சபை,
ஆற்றுப்பள்ளத்தாக்குகள் அபிவிருத்திச்சபை.

415, பௌத்தாலோக மாவத்தை,
கொழும்பு 7.

9—885/2—26.9.69 ந திகதிய வர்த்தமானி இல. 14,873

---

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### ஹக்வட்டுன ஓயாத் திட்டம்

கீழ்க்காணும் வேலைக்கான கேள்விப் பத்திரங்கள் வடமேல் பகுதி பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளரால் குருநாகல் அலுவலகத்தில் 21.10.69 ம் திகதி முற்பகல் 10 மணி வரையும் பெற்று உடன் திறந்து பரிசீலிக்கப்படும்.

| வேலையின் விபரம் | பதிவுத் தொகை ரூபா | கேள்விக் கட்டணம் ரூபா |
|---|---|---|
| சியம்பலங்கமுவ குளத்தின் 1 ம், 2 ம், 3 ம் வான்கள் உயர்த்துதல்–ஹக்வட்டுன ஓயாத் திட்டம், வட மேல் பகுதி | 96,000 .. | 200 |

2. நீர்ப்பாசனத் திணைக்களத்தில் 96,000 ரூபாவுக்கும் அதற்கு மேலும் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களும், கூட்டுறவுச் சங்கங்களும், கிராம முன்னேற்றச் சங்கங்களும் மட்டுமே கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

3. இக்கேள்விக்குரிய பத்திரங்கள் நீர்ப்பாசன அலுவலகம்,ஹக்வட்டுன ஓயா / குருநாகல் / நிக்கவெரட்டியா ஆகிய இடங்களில் அலுவலக நேரங்களில் 17.10.69 ஆம் திகதி வரைக்கும் பெற்றுக்கொள்ளலாம் கேள்வியாளராக முன்வருவோர் தங்கள் பதிவுப் புத்தகங்களுடன் தாம் இப்போது இத்திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஒரு அத்தாட்சிப் பத்திரத் துடன் கேள்விப் பத்திரத்தைக் கோரவேண்டும். இவை அவ் ஒப்பந்தக் காரர்கள் கேள்விப்பத்திரங்கள் அனுப்ப அனுமதிக்கப்படலாமாவென் றறிய நீர்ப்பாசனப் பொறியியலாளர் / உப–பிரிவு ஆபிசருக்குப் பயன் படும் வெற்றுப் பத்திரங்கள் வழங்குமுன் கேள்விக் கட்டணமாக 200 ரூபா நீர்ப்பாசன அலுவலகம், ஹக்வட்டுனஓயா / குருநாகல் / நிக்கவெரட்டியா ஆகிய இடங்களில் செலுத்தப்பட வேண்டும். இக் கேள்விக்கட்டணத்தை ஏதாவதொரு கச்சேரியில் செலுத்திப் பற்றுச் சீட்டுக் காட்டினாலும் போதுமானது.

4. இக் கேள்விக்காகிய மேலதிக விபரங்களை உப–பிரிவு ஆபிசர், ஹக்வட்டுன ஓயாத் திட்டம், மக்குல் பொத்த அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

செ. அப்பாத்துரை,
உப–பிரிவு ஆபீசர்,
ஹக்வட்டுன ஓயாத் திட்டம்.

மக்குல் பொத்த,
1969 ம் ஆண்டு செப்ரெம்பர் மீ 15 ந உ.

9–849—26.9.69 ந திகதிய வர்த்தமானி இல. 14,873

---

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### அம்பாரை உப பகுதி

பின்வரும் வேலைகளுக்கான கேள்விப் பத்திரங்கள் மட்டக்களப்பு பெரும்பாக நீர்ப்பாசனப் பெறியியலாளர் அவர்களால் 1969 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 20 ம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணி வரையும் ஏற்றுக் கொள்ளப்பட்டு அதன் பின்னர் உடனடியாகத் திறக்கப்படும்.

2. அவ்வவ் வேலைக்கு எதிரே காட்டப்பட்டுள்ள அல்லது அவைக்கு மேற்பட்ட தொகைக்கு நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பதியப்பட்டுள்ள கொந்தராத்துக்காரர்கள், கூட்டுறவுச் சங்கங்கள், கிராமாபிவிருத்திச் சங்கங்கள் மாத்திரமே கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகைமை யுடையவராவர்.

| கேள்வி இல. | வேலை விபரம் | பதிவுத் தொகை | கேள்விப் பத்திரக் கட்டணம் |
|---|---|---|---|
| அ/41/68–69 | மல்வத்தை–சுரிப்போடை வீதி முதலாம் கட்டை வரை சக்கைக்கல், சிறுகல், மணல் முதலியன கொண்டுதருதல் | .. 25,000 .. | 25 |
| அ/42/68–69 | மல்வத்தை–சுரிப்போடை வீதி முதலாம் கட்டை முதல் 2·0 ம் கட்டை வரை, சக்கைக்கல், சிறுகல், மணல் முதலியன கொண்டு தருதல் | .. 20,000 .. | 25 |
| அ/43/68–69 | மல்வத்தை–சுரிப்போடை வீதி 2·5 ம் கட்டை முதல 3·3 ம் கட்டை வரை சக்கைக்கல், சிறுகல், மணல், கிறவல் தருவ தோடு—பாதையை மண்போட்டு உயர்த்துதல் .. | .. 25,000 .. | 25 |
| அ/44/68–69 | மல்வத்தை–சுரிப்போடை வீதி 2 ம் கட்டையிலிருந்து 2·5 ம் கட்டை வரை சிறு கல், மணல் கொண்டு தரல் | .. 15,000 .. | — |

3. கேள்விப் பத்திரங்கள் அம்பாரை, கல்முனை அல்லது செங்கலடி உப நீர்ப்பாசன அலுவலக நேரங்களில் 1969 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 15 ந் திகதி புதன்கிழமை பிற்பகல் 4 மணிவரையும் பெற்றுக் கொள்ளலாம். கேள்வியாளராக முன்வருபவர் தமது பதிவுப் புத்தகத்துடன் இத் திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலை விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் வெளிப்படுத்தல் வேண்டும். இவை அவ்வொப்பந்தக்காரர் கேள்விப்பத்திரம் அனுப்பலாமா என்பதை அறிய ஏதுவாய் இருக்கும். வெற்றுப் பத்திரம் வழங்குமுன் மேற்காட்டிய நீர்ப்பாசன பொறியியலாளர் ஒருவரின் காரியாலயத்திலோ, அல்லது கச்சேரியிலோ மேற்காட்டிய கேள்விப் பத்திரக் கட்டணத்தைச் செலுத்தி பற்றுச் சீட்டுக் காட்டல் வேண்டும்.

4. இக் கேள்விகளுக்கான மேலதிக விபரங்களை அம்பாரை உப நீர்ப் பாசன அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

ஜி. எம். சந்திரதாச,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
அம்பாரை உப பிரிவு.

உப நீர்ப்பாசன அலுவலகம்,
அம்பாரை,
1969 ம் ஆண்டு செத்தெம்பர் மீ 15 ந உ.

9–942—26.9.69 ந திகதிய வர்த்தமானி இல. 14,873

---

## இலங்கை போக்குவரத்துச் சபை

கொழும்பு 5, கிருல வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கேள்விப்பத்திரச் சபைத் தலைவர், 1969 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 8 ஆம் திகதி புதன்கிழமை மு. ப. 10.00 மணிவரை பின்வரும் வேலைக்காகப் பொறிமிட்ட கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்வார்.

**காலி**

மாகாண வேலைக்களத்தை அமைத்தல்

பிரதம சிவில் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய பத்திரங்களில், கேள்விகள் இரட்டைப் பிரதிகளில் செய்யப்படவேண்டும். இவரிடமிருந்து எல்லா விவரங்களையும் பெற்றுக்கொள்வதுடன், இவரின் அலுவலகத்தில் படவரைவுகளையும் பரிசீலனை செய்யலாம். ரூபா 1,50,000/– தொகைக்குக் குறையாத சிவில் பொறியியல் வேலைகளுக்காக இ. போ. ச. வில் அல்லது அரசாங்க திணைக்களங்களில் பதிவுசெய்யப்பட்ட கொந்தராத்துக்காரர்கள் சேவையான கேள்விப்பத்திரச் சாதனங்கள் வழங்கப்படுவதற்காக கேள்விகள் ஒவ்வொன்றுக்கும் ரூபா 200/– க்கான கேள்விப்பத்திர கட்டுப்பணப் பற்றுச்சீட்டையும் கேள்விப்பத்திரச் சாதனங்களுக்கு மீளளிக்கப்படமாட்டாத கட்டணமாக ரூபா 25/– க்கான பற்றுச்சீட்டையும் 1969 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 4 ஆம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக பிரதம சிவில் பொறியியலாளருக்கு காட்டுவதன் பேரில் கேள்வியிடத் தகவுடையவர்களாயிருப்பார்கள். கேள்வியிடுபவர்கள் தங்களுடைய சான்றோலைகளைப் பரிசோதனைக்குக் காட்டவேண்டும். அவ்வித சான்றோலைகள் பிரதம சிவில் பொறியியலாளரால் ஏற்றுக்கொள்ளப்பட்டபின் கேள்விப் பத்திரக் கட்டுப்பணத்தை காசாக மாத்திரம் இ. போ. ச. பிரதம கணக்காள உத்தியோகத்திடம் கட்டலாம்.

பிரதம சிவில் பொறியியலாளர்,
இலங்கைப் போக்குவரத்துச் சபை.

200, கிருல வீதி,
கொழும்பு–5.

9–981/1—26. 9. 69 ந் திகதிய வர்த்தானி இல. 14,873

## இலங்கைப் போக்குவரத்துச் சபை

**மின்சாரம்**

கொழும்பு–5, கிருல வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கேள்விப்பத்திரச் சபைத் தலைவர், 1969 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 8 ஆம் திகதி புதன்கிழமை மு. ப. 10.00 மணிவரை பின்வரும் வேலைகளுக்காக முத்திரையிட்டு பொறியிட்ட கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்வார்.

(1) குளியாப்பிட்டி (2) மாத்தளை

மேற்குறித்த புதிய டிப்போக்களில்
மின்சார அமைப்பு

பிரதம சிவில் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய பத்திரங்களில் கேள்விகள் இரட்டைப்பிரதிகளில் செய்யப்படவேண்டும். இவரிடமிருந்து எல்லா விவரங்களையும் பெற்றுக்கொள்வதுடன், இவரின் அலுவலகத்தில் படவரைவுகளையும் பரிசிலனை செய்யலாம். ரூபா 45,000/– தொகைக்கு குறையாத மின்சார வேலைகளுக்கு இ. போ. ச. வில் அல்லது அரசாங்க திணைக்களங்களில் பதிவுசெய்யப்பட்ட கொந்தராத்துக்காரர்கள் தேவையான கேள்விப்பத்திரச் சாதனங்கள் வழங்கப்படுவதற்காக, கேள்விகள் ஒவ்வொன்றுக்கும் ரூபா 100/– க்கான கேள்விப் பத்திரக் கட்டுப்பணப் பற்றுச்சீட்டையும் கேள்விப்பத்திரச் சாதனங்களுக்கு மீளளிக்கப்படமாட்டாத கட்டணமாக ரூபா 25/– க்கான பற்றுச் சீட்டையும் 1969 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 4 ஆம் திகதி சனிக் கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக பிரதம சிவில் பொறியியலாளருக்கு காட்டுவதன் பேரில் கேள்வியிடத் தகவுடையவர்களாயிருப்பார்கள். கேள்வியிடுபவர்கள் தங்களுடைய சான்றோலைகளைப் பரிசோதனைக்குக் காட்டவேண்டும். அவ்வித சான்றோலைகள் பிரதம சிவில் பொறியியலாளரால் ஏற்றுக்கொள்ளப்பட்டபின் கேள்விப் பத்திரக் கட்டுப்பணத்தை **காசாக மாத்திரம்** இ. போ. ச. பிரதம கணக்காள உத்தியோகத்தரிடம் கட்டலாம்.

200, கிருல வீதி,
கொழும்பு–5.

பிரதம சிவில் பொறியியலாளர்,
இலங்கைப் போக்குவரத்துச் சபை.

9–981/2—26.9.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,873

---

## இலங்கைப் போக்குவரத்துச் சபை

கொழும்பு 5, கிருல வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபைக் கேள்விப்பத்திரச் சபைத் தலைவர், 1969 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26 ஆம் திகதி புதன்கிழமை மு. ப. 10.00 மணிவரை, தடுப்புத்திரவம் வழங்குவதற்கான பொறியிட்ட கேள்விப் பத்திரங்களை ஏற்றுக்கொள்வார்.

1969 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணிவரை எனது அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளக்கூடியதான பத்திரங்களில் கேள்விகள் இரட்டைப் பிரதிகளில் அனுப்பப்படவேண்டும். சபையின் பிரதம கணக்காள உத்தியோகத்தரிடம் கேள்விப்பத்திரக் கட்டுப்பணமாக ரூபா 100/– ஐக் காசாகக் கட்டி அவ்விதம் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டைக் கேள்விப்பத்திரங்கள் வழங்குவதற்காக எனது அலுவலகத்தில் காட்டவேண்டும்.

மேலதிக விவரங்களை எனது அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பிரதம வினியோக உத்தியோகத்தர்,
இலங்கைப் போக்குவரத்துச் சபை.

200, கிருல வீதி,
கொழும்பு–5.

9–962—26.9.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,873

---

## தேசிய வீடமைப்புத் திணைக்களம்

**தெஹிவளை வீடமைப்புத்திட்டத்தில் அடுக்குமாடிகளையும் கடைகளையும் அமைத்தல்**

விஞ்ஞான ஆராய்ச்சி, வீடமைப்பு அமைச்சினது கேள்விச்சபைத் தலைவரால் தெஹிவளை வீடமைப்புத் திட்டத்தில் அடுக்கு மாடிகளையும் கடைகளையும் அமைத்தற்காக 1969 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 31 ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிவரை கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் போது கேள்வியாளர்கள் சமுகமளிக்கலாம்.

கேள்விப்பத்திரங்கள் இத்திணைக்களக் கண்காணிப்புப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களில் இரு பிரதிகளாக அனுப்பப்பட வேண்டும். மேலும் தேவையான விபரங்கள் யாவும் இவரிடமிருந்து பெறலாம்.

பொதுவேலைத்திணைக்களத்தில் / நீர்ப்பாசனத் திணைக்களத்தில் / அரசாங்க திணைக்களங்களில் / அரசாங்க கூட்டுத் தாபனங்களில் கட்டட வேலைக்காக ரூபா 10,00,000 க்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் மாத்திரமே கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர். பதிவுச் சான்றிதழையும், கேள்விக் கட்டுப்பணமாக இத்திணைக்களச் சிறுப்பரிடம் ரூபா 250 செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டையும் சமர்ப்பிக்கும் ஒப்பந்தகாரர்களுக்கு 1969 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 27 ம் திகதி நண்பகல் 12 மணிவரை கேள்விப்படிவங்கள் வழங்கப்படும்.

து. இராஜேந்திரா,
தேசிய வீடமைப்பு ஆணையாளருக்காக.

தேசிய வீடமைப்புத் திணைக்களம்,
த. பெ. இல. 544,
கொழும்பு 2,
1969 ம் ௵ செப்டம்பர் ௴ 12 ந உ.

9–887—26.9.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,873

---

# கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள்

## பொலிஸ் திணைக்களம்

**கொம்பனி வீதியிலுள்ள பொலிஸ் தடுப்புக் காவல் நிலையத்திலுள்ள கள்ளக் குடியேற்றக்காரருக்கு சமைத்த உணவு வழங்குவதற்காய கேள்விப்பத்திரப் பெறுபேறுகள்**

(அ) கிடைக்கப் பெற்ற கேள்விப்பத்திரங்களின் தொகை : 2.

(ஆ) வெற்றி பெற்ற கேள்விப்பத்திரகாரரின் பெயர் : ஜனாப் நாகூர் மீரா ஜெனுல் ஆப்தீன், இல. 42, குமாரன் ரத்தினம் வீதி, கொம்பனித் தெரு, கொழும்பு 2.

(இ) ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிதங்கள்

| | ஒரு உணவின் விலை ரூ. ச. |
|---|---|
| 1. (அ) காலை உணவு .. .. | 0 32 |
| (ஆ) மத்தியான உணவு— | |
| (i) ஒரு கிழமையில் மூன்று நாட்களுக்கு ஒரு சம்பலுடனும் இரண்டு மரக்கறிகளுடனும் சோறு .. .. | 0 51 |
| (ii) இரண்டு நாட்களுக்கு இரண்டு மரக்கறிகளுடனும் கருவாட்டுடனும் சோறு .. | 0 53 |
| (iii) இரண்டு நாட்களுக்கு இரண்டு மரக்கறிகளுடனும் மீனுடனும் சோறு .. | 0 54 |
| (இ) பிற்பகல் தேநீர் அல்லது கோப்பி .. | 0 05 |
| (ஈ) இரவு உணவு .. .. | 0 35 |
| 2. நோயாளிகளுக்கு உணவு .. .. | 0 65 |

கொழும்பு பொலிஸ் அதிகாரி.

பொலிஸ் காரியாலயம்,
எச்சலன் சதுக்கம்,
கொழும்பு 1,
1969 ம் ௵ புரட்டாசி ௴ 14 ந உ.

9–841—26.9.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,873.

# பொருட்கள் விற்பனையும் பிறவும்

## கடற்றெழில் திணைக்களம்

### யந்திரம் உள்ளனவும்/யந்திரம் இல்லாதனவுமான பயனுறுத்தப்பட்ட வள்ளங்களின் ஏல விற்பனை

கீழே நிரலில் வழங்கப்பட்ட தேதிகளிலும் இடங்களிலும் யந்திரம் உள்ளனவும்/யந்திரம் இல்லாதனவுமான பயனுறுத்தப்பட்ட வள்ளங்கள் காலை 9.30 க்குப் பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.

2. நிரலில் குறிப்பிடப்பட்ட இடங்களில் வள்ளங்களைப் பார்வையிடலாம்.

3. கொடுப்பனவுகள் பணமாக, பின்வரும் முறைப்படி செலுத்தப்படல் வேண்டும் :—

(அ) விற்பனை முடிந்த உடனடியாக, வள்ளம் விற்கப்பட்ட விலையில் $\frac{1}{4}$ ;

(ஆ) வள்ளம் விற்கப்பட்ட விலையின் மீதி $\frac{3}{4}$, மூன்று நாட்களுட் செலுத்தப்படல் வேண்டும் ;

(இ) எந்த ஒரு வள்ளம்/என்ஜினைக் குறித்து விலை கேட்டல் தற்போதைக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டும், ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி உரிமை அல்லது தள்ளுபடியாக்கல், விற்கப்பட்ட திகதியிலிருந்து 14 நாட்கள்வரை ஒதுக்கி வைக்கப்படும். இந்த வகையில், வள்ளம்/என்ஜினின் விற்பனை விலையில் $\frac{1}{4}$ பங்கை வைப்புப் பணமாகவும், விற்பனை முடிந்தவுடனேயே பணமாகச் செலுத்த வேண்டும். விலை கேட்டல் ஏற்கப்படுமாயின், விற்பனை விலையின் மீதி $\frac{3}{4}$ பங்கும், இறுதியாக ஏற்றுக்கொள்ளல் அறிவித்தலுககு 3 நாட்களுக்கு முன்னராக செலுத்தப்படவேண்டும். இப்படிச் செய்யத் தவறின், வைப்புப்பணம் இழத்தலில் முடியும். விலை கேட்டலைத் தள்ளுபடி செய்யின் வைப்புப் பணம் மீளளிக்கப்படும்.

4. ஏலத்தில் விற்ற வள்ளம், உரிய பணம் செலுத்தி அப்புறப்படுத்தும்வரை, அவ்விடத்தில் அதன் பாதுகாப்பு விற்பனையில் வாங்கிய வனையே சாரும்.

நிரல்

| வள்ள எண் | என்ஜினின் இனம் | இடம் | ஏலத்தின் திகதி |
|---|---|---|---|
| எஸ் 275 | | இலங்கைக் கடற்றெழில் கூட்டுத்தாபனத்தின் கப்பல் இறக்கும் இடம், | |
| எஸ் ஐ வி 42 | டோர்பிடோ | மட்டக்குளி டிை | 30.10.69 |
| ரீ 46 | லிஸ்ரர் 22 ப. வ. | டிை | |
| எஸ் 10 | | விம்ஸ்ரார் வள்ளச்சாலை, மட்டக்குளி | 31.10.69 |
| ரீ 346 | | லூக்கஸ் வள்ளச்சாலை, பாணந்துறை | 2.11.69 |
| ரீ 175 | யன்மார் 8 ப. வ. | கட்டுக்குறுந்தை கூட்டுறவு வள்ளங்கள் கட்டுவோர் வள்ளச்சாலை, களுத்துறை வடக்கு | |
| கேபீபீ 1 | | டிை | 3.11.69 |
| எல் 2 | லிஸ்ரர் | டிை | |
| வீஜே 6 | | டிை | |
| ஜேபீஎப் 38 | கெல்வின் 20 ப. வ. | நவலங்கா வள்ளச்சாலை, பேருவளை | |
| எஸ் 189 | | டிை | |
| எம்சீ 58 | | டிை | |
| ஜேபீ 43 | | டிை | |
| ஓஎஸ் 7 | | டிை | 4.11.69 |
| எம்சீ 4 | | வேருவளைக் கடற்கரை | |
| எஸ் 172 | | டிை | |
| ஜீஎபீ 3 | | பலப்பிட்டியா கடற்றெழில் அலுவலகத்துக்குக் கிட்ட | |
| ஜேபீ 10 | | டிை | |
| எஸ் 162 | | பலப்பிட்டியா பாலத்துக்குக் கிட்ட | |
| எஸ் 247 | | டிை | 5.11.69 |
| எம்சீ 15 | | பலப்பிட்டியாக் கடற்கரை | |
| ரீ 403 | | ஹிக்கடுவைக் கடற்கரை | 6.11.69 |
| எஸ் 107 | | டிை | |
| எஸ் 3 | | ஜேபீஎப் வள்ளச்சாலை, நீர்கொழும்பு | 7.11.69 |
| வீஜே 1 | | வீஜே வள்ளச்சாலை, நீர்கொழும்பு | 11.11.69 |
| ரீ 14 | | நீர்கொழும்புக் கடற்கரை | 12.11.69 |
| எஸ் 38 | டியூற்ஸ் | டிை | |
| ரீ 122 | பார்சன்ஸ் | அளுத்கூறுவை, நீர்கொழும்பு | 13.11.69 |
| எஸ் 28 | | டபிள்யூ எப் வள்ளச்சாலை, நீர்கொழும்பு | 14.11.69 |
| வீஜே 2 | | மட்டக்களப்பு பார் | 15.11.69 |
| டபிள்யூ 5 | | உப்போடை | 17.11.69 |
| ரீ 7 | | பொத்துவில் கடற்கரை | 18.11.69 |
| ரீ 310 | | ஆர்வீடீபீ வள்ளச்சாலை, அம்பாறை | |
| ரீ 233 | | டிை | 19.11.69 |
| எஸ் 92 | யன்மார் 8 ப. வ. | டிை | |
| ஜேபீ 27 | | உப்புவெளி | 2.11.69 |
| எம்சீ 82 | | கடற்றெழில் அலுவலகம், திருகோணமலை | 3.11.69 |
| ரீ 53 | யன்மார் 8 ப. வ. | கடற்படை வளவு, திருகோணமலை | 4.11.69 |

கடற்றெழில் திணைக்களம்,
கொழும்பு 3,
1969 ம் ஆண்டு செப்தெம்பர் மீ 17 ந் உ.

ஐ. ஓ. கே. ஜீ. பர்ணந்து,
கடற்றெழில் இயக்குநர்.

9-945—26.9.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,873

## கடற்றொழில் திணைக்களம்

### பயனுறுத்தப்பட்ட கடலக டீசல் என்ஜின்களின் ஏல விற்பனை

கீழே நிரலில் வழங்கப்பட்ட தேதிகளிலும், இடங்களிலும் பயனுறுத்தப்பட்ட கடலக டீசல் என்ஜின்கள் காலை 9.30 க்குப் பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.

2. நிரலில் குறிப்பிடப்பட்ட இடங்களில் என்ஜின்களைப் பார்வையிடலாம்.

3. கொடுப்பனவுகள் பணமாக, பின்வரும் முறைப்படி செலுத்தப்படல் வேண்டும் :—

(அ) விற்பனை முடிந்த உடனடியாக என்ஜின் விற்கப்பட்ட விலையில் ¼ ;

(ஆ) என்ஜின் விற்கப்பட்ட விலையின் மீதி ¾, மூன்று நாட்களுட் செலுத்தப்படல் வேண்டும் ;

(இ) எந்த ஒரு என்ஜினைக் குறித்து விலை கேட்டல் தற்போதைக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டும், ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி உரிமை அல்லது தள்ளுபடியாக்கல், விற்கப்பட்ட திகதியிலிருந்து 14 நாட்கள் வரை ஒதுக்கி வைக்கப்படும். இந்த வகையில், என்ஜினின் விற்பனை விலையில் ¼ பங்கை வைப்புப் பணமாகவும், விற்பனை முடிந்தவுடனேயே பணமாகச் செலுத்த வேண்டும். விலை கேட்டல் ஏற்கப்படுமாயின், விற்பனை விலையின் மீதி ¾ பங்கும், இறுதியாக ஏற்றுக்கொள்ளல் அறிவித்தலுக்கு 3 நாட்களுக்கு முன்னராக செலுத்தப்பட வேண்டும். இப்படிச் செய்யத் தவறின், வைப்புப் பணம் இழத்தலில் முடியும். விலை கேட்டலைத் தள்ளுபடி செயயின் வைப்புப் பணம் மீளளிக்கப்படும்.

4. ஏலத்தில் விற்ற என்ஜின் உரிய பணம் செலுத்தி, அப்புறப்படுத்தும்வரை, அவ்விடத்தில் அதன் பாதுகாப்பு விற்பனையில் வாங்கிய வனையே சாரும்.

### நிரல்

| வள்ள எண் | என்ஜினின் இனம் | இடம் | விற்பனையின் திகதி |
|---|---|---|---|
| ஜேபீ 26 | குபோட்டா | கடற்றொழில் அலுவலகம், பாணந்துறை | 30.10.69 |
| ரீ 80 | புக் | கடற்றொழில் அலுவலகம், கட்டுநேரியா | 31.10.69 |
| எப் 21 | புக் | டிை | 31.10.69 |
| ரீ 331 | பெற்றர் 16 ப. வ. | டிை | 31.10.69 |
| எப் 20 | பார்சன்ஸ் 2 சிலி. | டிை | 31.10.69 |
| ஜேபீஎப் 48 | குபோட்டா 17 ப. வ. | டிை | 31.10.69 |
| ரீ 150 | புக் 11 ப. வ. | பெரும்பகுதிக் கடற்றொழில் அலுவலகம், நீர்கொழும்பு | 2.11.69 |
| எப் 22 | புக் | டிை | 2.11.69 |
| ரீ 230 | குபோட்டா, லிஸ்ரர் எச்ஏ (இல. 607 எச்ஏ 2 எம் 10) | டிை | 2.11.69 |
| ரீ 133 | புக் | டிை | 2.11.69 |
| ரீ 106 | புக் 11 ப. வ. | டிை | 2.11.69 |
| ரீ 115 | லிஸ்ரர் 12¾ ப. வ. | டிை | 2.11.69 |
| ரீ 88 | டியூற்ஸ் 9 ப. வ. | டிை | 2.11.69 |
| ரீ 222 | புக் | டிை | 2.11.69 |
| ரீ 116 | லிஸ்ரர் 12¾ ப. வ. | டிை | 2.11.69 |
| — | யன்மார் 18 ப. வ. (இல. 3347) | கடற்றொழில் பயிற்சி நிலையம், நீர்கொழும்பு | 3.11.69 |
| எஸ்ஜசீ 43 | ரோர்பிடோ | கடற்றொழில் அலுவலகம், திருகோணமலை | 3.11.69 |
| எஸ்ஜசீ 96 | டிை | டிை | 3.11.69 |
| ஜேபீ 27 | யன்மார் 8 ப. வ. | டிை | 3.11.69 |
| ரீ 286 | டிை | டிை | 3.11.69 |
| ரீஎஸ் 11 | பார்சன்ஸ் 11 ப. வ. | டிை | 3.11.69 |
| எஸ்ஜசீ 77 | ரோர்பிடோ | கடற்றொழில் அலுவலகம், காங்கேசன்துறை | 4.11.69 |
| எஸ்ஜசீ 127 | டிை | கடற்றொழில் அலுவலகம், முல்லைத்தீவு | 7.11.69 |

கடற்றொழில் திணைக்களம்,
கொழும்பு 3,
1969 ம் ஆண்டு செப்தெம்பர் மீ 17 ந் உ.

ஐ. ஓ. கே. ஜீ. பர்ணாந்து,
கடற்றொழில் இயக்குநர்.

9–946—26.9.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,873

## ஏல விற்பனை

### பொலிசுத் திணைக்களம்

உபயோகிக்க இயலாத பொலிஸ் உடைகள் துவிச்சக்கர வண்டிகள் முதலியன எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 31 ம் திகதி (31.10.69) வெள்ளிக் கிழமை மு. ப. 9 மணியளவில் நுவரெலியா பொலிஸ் அலுவலகத்தில் ஏலவிற்பனை செய்யப்படும்.

| | பொருட்கள் | தொகை |
|---|---|---|
| 1. | கறுப்பு மழை அங்கிகள் | 20 |
| 2. | தோட்டாப்பைகள் | 38 |
| 3. | தோற்பட்டிகள் | 41 |
| 4. | துவிச்சக்கரவண்டிகள் | 4 |
| 5. | கரம்பலகை | 1 |
| 6. | படுக்கை விரிப்புகள் | 82 |
| 7. | பலக்ளெவா தொப்பிகள் | 34 |
| 8. | தோல் சப்பாத்துகள் | 167 சோடி |
| 9. | துவிச்சக்கரவண்டி மட்காட் | 1 |
| 10. | துவிச்சக்கரவண்டி டயர்கள் | 2 |
| 11. | துவிச்சக்கரவண்டி டியூப்கள் | 2 |
| 12. | சேர்ஜ் தொப்பிகள் | 9 |
| 13. | உருக்குத் தொப்பிகள் | 2 |
| 14. | இஸ்திரிக்கைப்பெட்டி | 1 |
| 15. | துவிச்சக்கரவண்டிக் கரியர் | 1 |
| 16. | மண் ஜாடிகள் | 4 |
| 17. | கன்வஸ் சப்பாத்துகள் | 39 சோடி |
| 18. | பிளனல் சேட்டுக்கள் | 100 |
| 19. | காக்கி சேர்ஜ் அங்கிகள் | 26 |
| 20. | புல்வெட்டும் இயந்திரம் | 1 |
| 21. | காக்கி கால்மேசுகள் | 12 |
| 22. | காக்கி புஷ் கோட்டுகள் | 32 |
| 23. | காக்கி காற்சட்டைகள் | 113 |
| 24. | காக்கி அங்கிகள் | 74 |
| 25. | பலகைப்பெட்டிகள் | 17 |
| 26. | சமுக்காளங்கள் | 26 |
| 27. | தோற்பட்டி | 1 |
| 28. | தொப்பி | 1 |
| 29. | இறப்பர் மழை அங்கிகள் | 13 |
| 30. | தோட்டாப்பை | 2 |
| 31. | ரிவால்வர் உறை | 5 |
| 32. | மிற்றன் | 39 சோடி |
| 33. | தும்பு மெத்தைகள் | 53 |
| 34. | தொப்பி | 209 |
| 35. | தோற்சப்பாத்துக்கள் | 608 சோடி |
| 36. | காக்கி சேர்ஜ் கோட்டுகள் | 25 |
| 37. | சுவெற்றர்கள் | 129 |
| 38. | நீல கால்மேசுகள் | 60 சோடி |
| 39. | தகரம் 1 கலன் | 22 |
| 40. | தகரம் 4 கலன் | 62 |
| 41. | காக்கி பொலோ தொப்பி | 5 |
| 42. | பீப்பா 50 கலன் | 1 |
| 43. | மெயின் ரேடியோ செற் | 1 |

மேற்கூறிய பொருட்களை ஏலவிற்பனைக்கு முதல் நாள் நுவரெலியா பொலிஸ் அலுவலகத்தில் பார்வையிடலாம்.

விற்பனை முடிந்தவுடன், பணத்தை செலுத்தி பொருட்களை உடன் பெற்றுச் செல்லல் வேண்டும்.

டீ. டீ. எஸ். கே. றணசிங்ஹ,
உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்,
மத்திய மாகாணம் (தெற்கு)
நுவரெலியா.

பொலிஸ் அலுவலகம்,
நுவரெலியா,
9.9.69

9–801—26.9.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,873

---

# ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும்

## கேரதீவு சங்குப்பிட்டி ஆய சேவை

### 1969 ம் ஆண்டு நவம்பர் மாதம் 1 ம் திகதியிலிருந்து 1970 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 31 ம் திகதிவரை

1969 ம் ஆண்டு நவம்பர் மாதம் முதலாம் திகதியிலிருந்து 1970 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 31 ம் திகதி கால எல்லைவரை கேரதீவு சங்குப்பிட்டி ஆய சேவைக்கான குத்தகைக் கேள்விப்பத்திரங்கள் 1969 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 12 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி வரைக்கும் யாழ்ப்பாணக் கச்சேரியில் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விக்குரிய விண்ணப்பப்பத்திரங்கள் யாழ்ப்பாணக் கச்சேரியில் ரூபா 100/– (ரூபா நூறு) கட்டிப் பெற்றுக்கொள்ளவேண்டும். கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் இருக்கவேண்டும். வெற்றிபெற்ற குத்தகைக்காரர்கள் உரிய காலத்திற்குள் பிணைப்பணத்தைக் கட்டத் தவறினுல் அல்லது ஒப்பந்தத்தைக் கைச்சாத்திடத் தவறினுல் முன் கட்டிய கேள்விப்பணத்தை இழக்கவேண்டியும் அவருடைய பெயர் தவறுனர் உத்தரவுச்சீட்டு நிரலில் சேர்க்கப்பட்டுவிடும். இவற்றைத் தவிர்ந்து, ஏனைய கேள்வியாளரின் கட்டுப்பணம் வெற்றிபெற்ற விற்பனையாளர் விற்பனை நிபந்தனைகளில் கைச்சாத்திட்டு பிணைப்பணம் கட்டியபின்பு திருப்பிக் கொடுக்கப்படும்.

3. ஒவ்வொரு கேள்விப்பத்திரமும் பொறியிட்ட காகித உறைக்குள் வைக்கப்பட்டு 1969 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 12 ம் திகதி காலை 10 மணிக்கு முன் எனது காரியாலய உதவியாளரிடம் யாழ்ப்பாணக் கச்சேரியில் நேரில் சமர்ப்பிக்கலாம்.

4. கேள்விப்பத்திரங்கள் 1969 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 12 ம் திகதி காலை 10 மணிக்கு எனது காரியாலய உதவியாளரின் அலுவலகத்தில் திறக்கப்படும். அத்தருணம் கேள்வியாளர்கள் சமுகமளிக்கலாம்.

5. மேற்கூறப்பட்ட நாள் நேரத்துக்குப் பிந்திக்கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

6. கேள்வியாளர்கள் இச்சேவையை நடத்துவதற்கேற்ற விதிமுறைகளை யாழ்ப்பாணக் கச்சேரியில் பார்வையிடலாம்.

7. நியமனம் பெற்ற கேள்வியாளர் கேள்வித் தொகையில் பத்தில் ஒரு பங்கை முற்பணமாக உடனே செலுத்தவேண்டும் கேள்வித்தொகையில் அரைவாசியை காணிப் பிணையாகவும் அல்லது மூன்றில் ஒரு பங்கை காசுப்பிணையாகவும் கேள்விகள் ஏற்றுக்கொண்ட பத்து நாட்களுக்குள் பிணைப்பணமாகச் செலுத்தவேண்டும்.

8. நியமனம்பெற்ற கேள்வியாளர் தாங்கள் பிணையாகக் கொடுக்கும் காணிகளின் உறுதிகளைப் பார்வையிடுதல், உறுதிச்சீட்டு வரைதல், காணிகள் மதிப்பிடுதல், உறுதிச்சீட்டுப் பத்திரத்திற்குரிய முத்திரையை, முத்திரைச் சட்டத்தின்கீழ் தீர்மானித்தல் முதலிய வேலைகட்கு முடிக் குரிய பிரக்கிராசியாருக்கு கொடுக்கவேண்டிய போதிய பணத்தைச் செலுத்தவேண்டும்.

9. பிணையாகக் கொடுக்கும் ஒவ்வொரு உறுதிகளுடனும் அக்காணி களில் வில்லங்கம் அல்லது கடன் எதுவும் இல்லையென்று உறுதிப் படுத்தும் காணிப்பதிவாளரின் பத்திரம் இணைக்கப்படவேண்டும். பிணை கட்டுபவரே மேற்கூறிய பத்திரம் பெற்றுக்கொள்வதற்குரிய செலவும் கொடுக்கவேண்டும்.

10. கேள்விகள் எதுவும் கிடைக்காவிட்டால் அல்லது கிடைத்த கேள்விகள் திருப்திகரமாக இல்லாவிட்டால் ஆயக் குத்தகைக் கேள்விப் பத்திரங்கள் திறந்த அன்றே ஏல விற்பனைக்கு விடப்படும்.

11. அரசாங்க அதிபர் எந்தக் கேள்வியையும் அல்லது எல்லா வற்றையுமே எக்காரணமும் காட்டாமல் நிராகரிக்க உரிமை உண்டு.

12. நியமனம் பெற்ற கேள்வியாளர் இலங்கைத் தொழிலாளர் களையே வேலைக்கு அமர்த்தல் வேண்டும்.

13. ஆயக்குத்தகை நடத்துபவர் இலங்கைத் தொழிலாளர்களையே வேலைக்கு அமர்த்த வேண்டும். இது ஆயக்குத்தகையின் விதி முறைகளின் ஒன்ருக இருக்கும். இந்த விதியை மீறும் நியமனம் பெற்ற கேள்வியாளர் ஆயக்குத்தகை உரிமையை இழக்க நேரிடும். திறைசேரியின் அனுமதியுடன் அரசாங்க அதிபர் இலங்கையர் அல்லா தாரை குறிப்பிட்ட காரணங்களுக்காக வேலைக்கு அமர்த்த எழுத்துமூலம் அனுமதிக்கலாம். குறித்த அனுமதியை எழுத்துமூலம் பெறுமல் இலங்கையர் அல்லாதாரை வேலைக்கு அமர்த்தக்கூடாது.

14. இன்னும் மேற்கொண்டு விபரங்கள் வேண்டுவோர் யாழ்ப்பாண அரசாங்க அதிபருக்கு மனுப்பண்ணிப் பெற்றுக்கொள்ளலாம்.

எவ். சீ. பீட்டேர்ஸ்,
யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர்.

கச்சேரி, யாழ்ப்பாணம்.
1969 ம் ஆண்டு செப்டெம்பர் மீ 16 ந் உ.

9–920— 26.9.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,873

# நானாவித அறிவித்தல்கள்

## கலாச்சார அலுவல் பகுதி

### தேசிய கலாச்சாரப் பரிசு வழங்கல்

1. இந்நாட்டின் இலக்கியம், லளித கலை ஆகியவற்றை வளர்த்தற்கும், உயர்ந்த தரத்தைத் தோற்றுவித்தற்கும் கலைஞர்களிடையே ஆர்வத்தை எற்படுத்தும் நோக்குடன், இலக்கியம், நாடகம், நாட்டியநாடகம், வானொலி நாடகம், திரைப்படம், ஓவியம், சிற்பம், இசை ஆகிய கலைகளுக்குரிய படைப்புகளுக்கு வழங்கப்படும் தேசிய கலாச்சாரப் பரிசு சம்பந்தமான விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

2. 1969 ஜனவரி 1 ஆம் திகதியிலிருந்து 1969 டிசம்பர் 31 ஆம் திகதி வரைக்குட்பட்ட கால எல்லைக்குள் நிறைவெய்திய படைப்புகள் மாத்திரமே பரிசு வழங்குதற்காகப் பரிசீலனை செய்யப்படும்.

3. போட்டிக்காகக் கலைப்படைப்புகளைப் பரிசீலனை செய்யும் முறை அந்தந்தப் பிரிவின் கீழ் விவரிக்கப்பட்டுள்ளது.

4. பரிசு வழங்குதலுடன் தொடர்புபட்ட சகல காரியங்கள் சம்பந்தமாகவும், தேசிய கலாச்சார பரிசுச் சபை செய்யும் முடிபே இறுதியானதாக இருக்கும்.

(அ) **கௌரவ பிரதம அமைச்சரது இலக்கியப் பரிசு** ரூ. 25,000.00
இப்பரிசு அதி உயர்ந்த இலக்கியப் படைப்புக்காக (அச்சிட்டது) வழங்கப்படும், இப்பரிசுக்காகத் தரமான படைப்பினைத் தேர்ந்தெடுக்கையில் ஆராய்ச்சி, விமர்சனம் ஆகிய துறைகளுக்குரிய அச்சிடப்பட்ட நூல்களும் பரிசீலனை செய்யப்படும்.

(ஆ) **இலக்கியம் :**

**சிங்களம் :**

| | |
|---|---|
| சிறந்த நவீனம் | .. ரூ.2,500.00 பரிசு ஒன்று |
| சிறந்த சிறுகதைத்திரட்டு | .. ரூ.2,500.00 பரிசு ஒன்று |
| சிறந்த கவிதைநூல் | .. ரூ.2,500.00 பரிசு ஒன்று |
| சிறந்தமொழிபெயர்ப்பு | .. ரூ.2,000.00 பரிசு ஒன்று |
| சிறந்த நாடக நூல் | .. ரூ.2,500.00 பரிசு ஒன்று |
| சிறந்த சிறுவர் நூல் | .. ரூ.2,500.00 பரிசு ஒன்று |
| நானாவிதம் (ஆராய்ச்சி, விமர்சனம் ஆகியன) | .. ரூ.2,500.00 பரிசு ஒன்று |

**தமிழ் :**

| | |
|---|---|
| சிறந்த நவீனம் | .. ரூ.2,500.00 பரிசு ஒன்று |
| சிறந்த சிறுகதைத்திரட்டு | .. ரூ.2,500.00 பரிசு ஒன்று |
| சிறந்த கவிதை நூல் | .. ரூ.2,500.00 பரிசு ஒன்று |
| நானாவிதம் (ஆராய்ச்சி, விமர்சனம் சிறுவர் இலக்கியம் ஆகியன) | .. ரூ.2,500.00 பரிசு இரண்டு |

**முக்கிய குறிப்பு :**

இரண்டாவது பந்தியில் குறிப்பிட்டுள்ள கால எல்லையினுள் அச்சிடப்பட்டு, அச்சிடுவோர், பிரசுரிப்போர் பிரமாணத்தின் (179 ஆம் பிரிவின்) கீழ், நூல் செய்திப் பத்திரிகை பதிவுகாரர் காரியாலயத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள நூல்கள் மாத்திரமே பரிசு வழங்குதற்காகப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். போட்டியில் பங்குபற்றுவோர் நூற்பிரதிகள் அனுப்புதல் அவசியமில்லை. பரிசுக்குரிய நூல்களைத் தேர்ந்தெடுத்தல் ஸ்ரீலங்கா சாகித்திய மண்டலத்தினல் செய்யப்படும்.

(இ) **மேடை நாடகம் :**

**சிங்களம் :**

| | |
|---|---|
| சிறந்த மேடை நாடகங்கள் இரண்டிற்காக | .. ரூ.2,500.00 பரிசு ஒன்று |
| | .. ரூ.1,000.00 பரிசு ஒன்று |

**தமிழ் :**

| | |
|---|---|
| சிறந்த மேடை நாடகம் | .. ரூ.2,500.00 பரிசு ஒன்று |

**குறிப்பு :** பிறிதின் சார்பற்ற சொந்தப் படைப்புகள் மாத்திரமே பரிசு வழங்குதலுக்காகப் பரிசீலனை செய்யப்படும். இவ்வருடத்தினுள் தயாரிக்கப்பட்ட நாடகமும், இலங்கைக் கலை மன்றத்தினல் தற்போது ஒழுங்கு செய்யப்படும் நாடகமும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். பரிசுக்கு உகந்த நாடகத்தைத் தேர்ந்தெடுத்தற்காக வருட முடிவில் நாடகவிழா ஒன்றை நடத்த எற்பாடுகள் செய்யப்படும்.

(ஈ) **நாட்டிய நாடகம் :**

| | |
|---|---|
| சிறந்த நாட்டிய நாடகத்திற்கு | .. ரூ. 2,500.00 பரிசுஒன்று |

**குறிப்பு.**— பரிசு வழங்குதற்கு உகந்த நாட்டிய நாடகத்தைத் தேர்ந்தெடுத்தற்காக அவை மேலே குறிப்பிட்ட நாடக விழாவில் அரங்கேற்ற எற்பாடுகள் செய்யப்படும்.

(உ) **வானொலி நாடகம் :**

| | | |
|---|---|---|
| **சிங்களம் :** | சிறந்த வானொலி நாடகம் | .. ரூ. 1,000.00 பரிசு ஒன்று |
| **தமிழ் :** | சிறந்த வானொலி நாடகம் | .. ரூ. 1,000.00 பரிசு ஒன்று |

**குறிப்பு.**— இப்பரிசு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் மா அதிபரது சிபார்சின்படி வழங்கப்படும்.

(ஊ) **திரைப்படம் :**

**சிங்களம் :**

| | |
|---|---|
| சிறந்த நெறிப்படுத்துநர் | .. ரூ. 1,500.00 பரிசு ஒன்று |
| சிறந்த படப்பிடிப்பாளர் | ரூ. 1,000.00 பரிசு ஒன்று |
| சிறந்த வசனகர்த்தா | .. ரூ. 1,000.00 பரிசு ஒன்று |

இந்நாட்டில் தயாரிக்கப்படும் பிறிதின்சார்பற்ற தமிழ் திரைப்படங்களுக்கும் இவ்வாறு மூன்று பரிசுகள் வழங்கப்படும்.

(எ) **ஓவியம் :**

| | |
|---|---|
| சிறந்த ஓவியங்கள் இரண்டிற்கு | ரூ. 2,000.00 பரிசு ஒன்று |
| | .. ரூ. 1,000.00 பரிசு ஒன்று |

(ஏ) **சிற்பம் :**

| | |
|---|---|
| சிறந்த சிற்பங்கள் இரண்டிற்கு | ரூ. 2,500.00 பரிசு ஒன்று |
| | .. ரூ. 1,000.00 பரிசு ஒன்று |

**குறிப்பு :**

வருடமுடிவிலே கொழும்பில் ஓவிய, சிற்பக் கண்காட்சி ஒன்று நடத்தப்படும். பரிசுக்கு உகந்த படைப்புகள் அக் கண்காட்சியிலேயே தேர்ந்தெடுக்கப்படும்.

(ஐ) **இசை : சிங்களம்.**— சிறந்த இசை

| | |
|---|---|
| அமைப்புக்கு | .. ரூ. 2,000.00 பரிசு ஒன்று |
| தமிழ் சிறந்த இசை அமைப்புக்கு | ரூ. 2,000.00 பரிசு ஒன்று |

**குறிப்பு :**

கூட்டு வாய்ப்பாட்டு, கூட்டுவாத்திய இசை, திரைப்படம், நாடகம், அல்லது நாட்டிய நாடகம் ஆகியவற்றுக்காக அமைக்கப்பட்ட இசை ஆகியன பரிசுக்காகப் பரிசீலனை செய்யப்படும். இப்பரிசு சிறந்த பாடகருக்கும் வழங்கப்படுதற்கு இடமுண்டு. பரிசுக்கான படைப்பைத் தேர்ந்தெடுத்தற்காக இசை விழா ஒன்று ஒழுங்குசெய்யப்படும்.

எச். எச். பண்டார,
தேசிய கலாச்சார பரிசுச்சபைசெயலாளரும்,
உதவிக்கலாச் சார அதிபரும்.

கலாச்சார அலுவல் பகுதி,
135, தர்மபாலமாவத்தை,
கொழும்பு–7.

9—1081

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைத்த அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ள மாட்டார்.

### அட்டவணை—1969

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|
| யூன் | 6.6.69 | வெள்ளி | 30.5.69 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| | 13.6.69 | வெள்ளி | 6.6.69 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| | 20.6.69 | வெள்ளி | 13.6.69 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| | 27.6.69 | வெள்ளி | 20.6.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| யூலை | 4.7.69 | வெள்ளி | 27.6.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 11.7.69 | வெள்ளி | 4.7.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 18.7.69 | வெள்ளி | 11.7.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 25.7.69 | வெள்ளி | 18.7.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| ஓகத்து | 1.8.69 | வெள்ளி | 25.7.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 8.8.69 | வெள்ளி | 1.8.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 15.8.69 | வெள்ளி | 8.8.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 22.8.69 | வெள்ளி | 15.8.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 29.8.69 | வெள்ளி | 22.8.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| செத்தெம்பர் | 5.9.69 | வெள்ளி | 29.8.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 12.9.69 | வெள்ளி | 5.9.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 19.9.69 | வெள்ளி | 12.9.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 26.9.69 | வெள்ளி | 19.9.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| ஒற்ரோபர் | 2.10.69 | வியாழன் | 26.9.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 9.10.69 | வியாழன் | 2.10.69 | வியாழன் | ந.ப. | 12.00 |
| | 17.10.69 | வெள்ளி | 9.10.69 | வியாழன் | ந.ப. | 12.00 |
| | 24.10.69 | வெள்ளி | 17.10.69 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| | 31.10.69 | வெள்ளி | 24.10.69 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| நவெம்பர் | 7.11.69 | வெள்ளி | 31.10.69 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| | 14.11.69 | வெள்ளி | 6.11.69 | வியாழன் | ந.ப. | 12.00 |
| | 21.11.69 | வெள்ளி | 14.11.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 28.11.69 | வெள்ளி | 21.11.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| திசெம்பர் | 5.12.69 | வெள்ளி | 28.11.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 12.12.69 | வெள்ளி | 4.12.69 | வியாழன் | பி.ப. | 3.30 |
| | 19.12.69 | வெள்ளி | 12.12.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 26.12.69 | வெள்ளி | 18.12.69 | வியாழன் | பி.ப. | 3.30 |

அரசாங்க அச்சகப் பகுதி, கொழும்பு,
1969 ம் ஆடு யூன் மீ 13 ந உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகன்.

இலங்கை அரசாங்க அச்சகப் பகுதியிற் பதிப்பிக்கப்பெற்றது.